# தொண்டன்

1989
நவம்பர்

ஆரம்பம்: பெப்ரவரி - 1969.



4/50

# தொண்டன்

நவம்பர் - 1989

மலர்: 21 இதழ்: 09

ஆசிரியர்;
கிங்ஸ்லி றெபட்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு:
எஸ். லோகநாதன்
பி. ஜோசப்

வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு./ மட். மறை மாவட்டம்.

தொடர்பு:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை:
தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-



உள்ளே...

1) எமது குரல் ... ... 1
2) ரஷ்யாவில் ஆன்மீக... ... 2
3) முரண்பாடு ... ... 3
4) மண்ணுக்குத் திரு... ... 5
5) இரவலும் துருவலும் ... 7
6) உன்னையே நீ நம்பு ... 08
7) கவி ஆரம் ... 11
8) மாணவர் பக்கம் ... 12
9) மரணம் தோற்கும் ... 15
10) சந்தனச் சிதறல்கள் ... 17
11) நன்றி கூறும் ... 21
12) கிறிஸ்தவ ஒழுக்கம் ... 23
13) இளைஞர் அரங்கம் ... 25
14) அச்சுத்துறையும்... ... 26
15) விவிலியக்குறுக்கெழுத்து... 27



## இணைந்து வரும்...

எதிர்வரும் தொண்டன், டிசம்பர், ஜனவரி ஆகிய இருமாதங்களும் இணைந்து கிறிஸ்மஸ் புத்தாண்டுச் சிறப்பிதழாக வெளி வரும்.

—நிர்வாகம்—

# எமது குரல் . . .

## நாம் சாக வேண்டும்

பொதுவாகக் கத்தோலிக்க மக்கள் கார்த்திகைத் திங்களில் இறந்துபோன விசுவாசிகளை, தம் உறவினர்களை, நண்பர்களை நினைந்து வழிபாடுகள் இயற்றுவது வழக்கம். இதற்குக் கட்டியம் கூறுவதுபோல் கார்த்திகைத் திங்கள் இரண்டாம் நாளை இறந்த விசுவாசிகளின் நினைவு நாளாகத் திருச்சபை அனுசரிக்கிறது.

இறந்த விசுவாசிகளின் நினைவு, இறப்புப் பற்றியும் வாழ்வின் நிலையாமை, இறுதியில் விளையும் இயலாமையால் எழும் சோகம் போன்ற உணர்வுகளை உள்ளத்தில் எழுப்பிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், சாவைப்பற்றிச் சிந்திக்க ஒரு கார்த்திகையா வேண்டும் என்று கேட்பது போல் இன்று நாளும், பொழுதும் சாவுகளும், கொலைகளும், அழிவுகளுமே நமது நாட்டில் அன்றாட நிகழ்வுகளாகி விட்டன.

இது போதாதென்று பொருளாதாரச் சீர்குலைவுகளும், அழிவுகளும், உச்சியில் ஏறிவிட்ட விலைவாசிகளும் நம்மைச் சாகாமல் சாகடிக்கின்றன.

இந்நிலையில் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் நாம் பல்வேறு விதமான சாவுகளையிட்டுச் சிந்திக்கத் தள்ளப்பட்டிருக்கின்றோம். ஆனால் இந்தச் சாவுகளை அர்த்தமுள்ள சாவுகளாக்குவது, உயிர்ப்பின் ஊடகமாக்குவது மனித சமூகத்தின் கடமை. அதற்கு:

நாம் சாக வேண்டும்! ஆம்! நம்மில் நாம் சாக வேண்டும்.

நம்மிடையே எழுந்துள்ள அதிகாரப் போட்டியின் தவறான வழிமுறைகள்,

இன ஒடுக்கு முறைகள்,

மனித உயிரை மதிக்காத வன்முறைகள்,

அநீதிகள், சுரண்டல்கள், பழிவாங்குதல்கள்,

இவற்றின் வெளிப்பாட்டுக்குக் காரணமான நமது குரூர மனப்பாங்குகள், நம்மிடம் சாகவேண்டும். அதை நாம் சாகடிக்க வேண்டும்.

அப்போதுதான் உயிர்ப்பின் தளிர்கள் நம்மிலும், நமது சமூகத்திலும் துளிர்த்தெழும்.

மலர்வேந்தன்




அவரோடு இறந்தோமானால்
அவரோடு வாழ்வோம்.

2 திமோ. 2/11

# ரஷியாவில் ஆன்மீக மறுமலர்ச்சி

# பாத்திமா அன்னையின் ஏக்கம் தீரும்

ரஷியா மனந்திரும்ப வேண்டும் என்ற தனது அவாவை அன்னைமரி பாத்திமா நகரில் வெளியிட்டாள். தம் மக்களின் செபதபங்களைக் கோரினாள்.

ரஷ்ய அதிபர் கொர்பச்சேவ் அறிமுகப் படுத்தியுள்ள பெரஸ்ட்ரோய்க்கா, கிளாஸ் நாஸ்ட் எனும் புதிய கொள்கைகள் மூலம் ரஷியாவில் மறைச்சுதந்திரமும், விறுவிறுப் பான மறைமறுமலர்ச்சியும் உண்டாகியுள்ளன. இவை கண்டு அன்னையின் நெஞ்சம் குளிரும்.

1988 தான் ரஷியாவின் ஞானஸ்ஞான ஆண்டு. சர்வாதிகாரி ஸ்டாலின் கையாண்ட வேதகலாபனையும், அடக்குமுறையும் ரஷியா வைத் தூய்மைப் படுத்தும் பாஸ்காவிற்கு ஒப்பாகும். இந்த இருண்டகாலமும் ரஷியத் திருச்சபைக்குத் தேவைப்பட்டது. அது முதல் தான் ரஷியத் திருச்சபை அதிகாரம், செல்வம் ஆகிய கொக்கிகளிலிருந்து தன்னையே அறுத்துக் கொண்டு விடுதலை பெற்றது. இருண்ட காலத் தின் வேதனைகளே ஞானத்தைக் கொடுத்தன. இந்த ஞானத்தால், உலகியல் நிறுவனங்க ளோடு உரையாடலை மேற்கொள்ளத் தூண்டியது.

## ரஷியாவில் கத்தோலிக்கத் திருச்சபை

திருத்தந்தையால் நியமனம் பெற்ற கர்தி னால் ஜீலியன் வைவோட்ஸ் தலைமையில் இரு உயர் மறை மாவட்டங்களும், நான்கு மறை மாவட்டங்களும், அவற்றுள் 179 பங்குகளில் 1,100 கோவில்களும் உள்ளன. கத்தோலிக்கர் பெருமளவில் வாழும் பகுதிகள், யுக்ரேன், பைலோ ரஷியா, லட்வியா, லித்துவானியா.

## மறை பணியில் வேறு சபைகள்

இங்கு மிகப்பெரிய சபை ரஷிய கீழ்த் திசைத் திருச்சபை. 1985 - ல் மட்டும் 35 வழிபாட்டுத் தலங்களை பெற்றுள்ளது அல்லது எழுப்பியுள்ளது.

எவான்ஜலிஸ்ட் கிறிஸ்தியன் பப்டிஸ்ட் இவ்வாறு 49 இடங்களைக் கொண்டுள்ளது. 5000 சமூகங்களில் 5 இலட்சம் விசுவாசிகளைக் கொண்டுள்ளது.

40 சபைகள் உள்ளன. 15000 மறை சார்பான சங்கங்கள் உள்ளன. 20,000 வழி பாட்டு இடங்கள் செயல்படுகின்றன. 11 முஸ் லிம் வாழிபாட்டுத் தலங்களும் உள்ளன. ரஷிய முஸ்லிம்கள் ஹஜ் யாத்திரையை மேற் கொள்கின்றனர்.

## மறையாளர்க்கு

சுயவிடுதலையே மறையின் நோக்கம். ரஷியாவில் நடைபெறும் மறுமலர்ச்சி சுய விடுதலையில் உள்ள வேட்கையை நிரூபிக்கின் றது ஆனால் எளிய வாழ்க்கைக்குத் திருச்சபை திரும்பவேண்டும். எளிய மக்களோடு இணைந்து எளிய வாழ்வை மேற்கொள்ளாத திருச்சபை கள் அனைத்துமே என்றாவது ஒரு நாள், அல்லது ஏதேனும் ஒரு காலகட்டத்தில் ரஷியாவின் அனுபவத்தைப் பெறும் கட்டாயத்தைச் சந்திக்கவேண்டிவரும். சரித்திரம் திரும்பும் என்போர் அறிந்தோர்.

**அருள்திரு. மிஸ்குய்த்தா**
*(நன்றி, சர்வவியாபி)*

# முரண்பாடு

நகரின் பிரபல கிறீஸ்தவ பாடசாலை அது. சமயபாட வகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது. லிசி ரீச்சர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். நல்ல சமாரித்தன் உவமையை அவள் கற்பிக்கும் அழகை வியந்து அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தனர். 8ம் வகுப்புப் பிள்ளைகள். பல விளக்கப் படங்களைக் காட்டி நடைமுறை உதாரணங்களைக் கூறி மாணவர்களுக்கு உவமையை நன்கு விளக்கினார். பின் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து அவர்கள் தமக்குள் உவமையைப் பற்றிக் கலந்து பேசுமாறு விட்டார். சற்று நேரத்தால் பாடத்தைப் பிள்ளைகள் சரி வர விளங்கிக் கொண்டனரா என்பதை உறுதிப் படுத்துவதற்காகச் சில கேள்விகள் கேட்டார். பிள்ளைகள் தெளிவாக விடை கூறவே ஆசிரியைக்கு மகிழ்ச்சியும் திருப்தியும்.

பாடசாலை முடிந்து வின்சியும் அருணும் வீடுதிரும்பிக் கொண்டிருந்தனர்.

''நல்ல சமாரித்தன் உவமை நல்லா இருந்தது இல்லையா?'' வின்சி கேட்டாள்.

''ஓ, ரீச்சர் நல்லா வடிவாகச் சொல்லிக் கொடுத்தா. மற்றவங்களுக்கு உதவுறது எவ்வளவு நல்லது'' அருண்.

''அப்படிச் செய்யிறதுக்கு நாங்கள் எப்பவும் ஆயத்தமாக இருக்க வேணும்''

வின்சியின் பதிலுடன் வீடுகள் அண்மிக்கவே உரையாடல் நின்றது. நண்பர்கள் தமது வீடுகளுக்குப் போய் விட்டனர்.

சில தினங்களின் பின் ஒரு நாள் - வின்சியும் அருணும் வழக்கம் போல் பாடசாலைக்குப் போய்க் கொண்டிருந்தனர். மக்கள் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர், வாகனங்களும் விரைந்து கொண்டிருந்தன. திடீரென்று 'படார்' என்ற ஓசையும் அதனைத் தொடர்ந்து ''ஆ... ஐயோ'' என்ற அலறலும். வீதியின் மற்றப்பக்கமாக இருந்த குறுக்கு வீதியில் வயோதிபர் ஒருவர் விழுந்து கிடந்தார். குறுக்கு வீதியில் இருந்து பிரதான வீதியை நோக்கி சைக்கிளில் வந்த வாலிபன் பிரதான வீதியில் இருந்து குறுக்கு வீதிக்குத் திரும்பிய வயோதிபர் மீது சைக்கிளை மோதி விட்டு நிறுத்தாமலேபோய்விட்டான். அவனுக்கு என்ன அவசரமோ அல்லது பயமோ? கையில் வைத்திருந்த பை கிழிந்து மரக்கறி, பாண், பத்திரிகை ஆகியன சிதறிக் கிடந்தன. அருணும் வின்சியும் வீதியைக் கடந்து வயோதிபரிடம் ஓடினர். நல்ல சமாரித்தன்களாகும் துடிப்பு அதில் தெரிந்தது. அவருக்குப் பெரிய காயம் ஒன்றுமில்லை. ஆனால் சைக்கிளின் பெடல் முழங்காலில் பலமாக இடித்து விட்டதால் அவரால் சரியாக நடக்க முடியவில்லை. நண்பர்கள் இருவருமாக அவரை ஒருவாறு தூக்கி நிறுத்தினர். நாளாந்தம் வீதியில் கிடக்கும் மரணித்த மனித உடல்களைக் கண்டு மனம் மரத்துப் போனதாலோ என்னவோ ''பெரியவர்கள்'' எவரும் வயோதிபரின் உதவிக்கு வரவில்லை. அருண் அவரைப் பிடித்துக் கொள்ள வின்சி சிதறிக்கிடந்த பொருட்களை ஒன்று சேர்த்துத் தனது புத்தகப் பையில் எடுத்துக் கொண்டாள். இருவருமாக வயோதிபரை ஒருவாறு சில நூறு யார்கள் தள்ளி அமைந்துள்ள அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்றனர், பொருட்களையும் ஒப்படைத்தனர். வீட்டிலிருந்தவர்களும் அந்த வயோதிபருமாக இருவருக்கும் நன்றி கூறி தேநீர் அருந்தி விட்டுச் செல்லுமாறு கேட்டனர்.

பாடசாலைக்கு நேரமாகி விட்டதாகக் கூறிதேநீர் அருந்

சிறுகதை

தாமலே பாடசாலே நோக்கி விரைந்தனர், நல்ல சமாரித் தர்கள் இருவரும்.

''நாங்கள் ஒருவருக்கு உதவி செய்தபடியாலேதானே பிந்திப் போனம். ஆனபடியாலே சிறில் மாஸ்ரர் அடிக்க மாட்டார்.''

வின்சியின் நம்பிக்கை இது.

''அப்பிடித்தான் நானும் நினேக்கிறேன்'' அருண் கூறினன்.

## இராணி மேரி

பாடசாலே தொடங்கி நடைபெற்றுக் கொண்டிருந்தது. இருவருமாக உள்ளே நுழைகையில் அடுத்த கட்டிடத்தில் இருந்து ஒழுங்குகளுக்குப் பொறுப்பான சிறில் மாஸ்ரர் வருவது தெரிந்தது. தாமதமாகப் பாடசாலேக்கு வருபவர்கள் அவரது அனுமதி இல்லாமல் வகுப்புகளுக்குப் போக முடியாது. வின்சியும் அருணும் அவரிடம் சென்று தாமதத்திற்கான காரணத்தைப் பணிவுடன் கூறினர்.

''அந்தக் கதையெல்லாம் எனக்குத் தேவையில்லே. சமூக சேவை செய்யிற நினேப்போ உங்களுக்கு? முதல்லே நேரத்துக்குப் பள்ளிக் கூடத்துக்கு வரப் பழகிக் கொள்ளுங்கோ. மிச்சத் தொண்டு வேலேகளேப் பிறகு பார்க்கலாம்''

அவரின் பிரம்பு சுழன்றது. கன்றிச் சிவந்த உள்ளங் கைகளேத் தடவியவாறே அருணும் வின்சியும் வகுப்பை நோக்கிச் சோர்வுடன் நடந்தனர்.

(யாவும் கற்பனே)

# புனித கன்னி மரியாள்
# பிறந்த தின விழா

மனுக்குல மீட்பரின் அன்னேயாம் புனித கன்னி மரியாள் பிறந்த தின விழா கடந்த 08 - 09 - 1989 வெள்ளி அன்று மாலே 3.30 மணிக்கு மட் / வீச்சுக்கல் முனே புனித அன்னம்மாள் ஆலயத்தில் மட் / மறை மாநில கியுறியா சபை சார்பாக இடம் பெற்றது. நகர எல்லேக்குள் அடங்கிய பங்குகள், மற்றும் செங்கலடி, தன்ருமுனே, நாவற்குடா ஆகிய அண்மிய பங்குகளிலுமிருந்தும் மரியாயின் சேனே சகோதர, சகோதரிகள் மற்றும் அன்னேயின் மைந்தர்கள் பெருமளவில் மிகுந்த பக்தியுடன் கலந்து கொண்டனர். விழாவின் ஆரம்ப நிகழ்ச்சியாக எங்கள் ஆயர் அதி. வந். யோசப் கிங்ஸ்லி சுவாம் பிள்ளே ஆண்டகை, கியுறியா சபை ஆன்ம இயக்குநர் அருட்திரு. T. ருகல் அடிகள், மறைக்கல்வி நடுநிலேய அதிபர் அருட்திரு. A. தேவதாஸன் அடிகள் ஆகியோர் அன்னேயின் அலங்கரிக்கப்பட்ட சொருபத்திற்கு மலர்மாலேகளே அணிவித்து விழாவை ஆரம்பித்து வைத்தார்கள் கியுறியா சபை தலேவர் சகோ. E. கபிரியல் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்திஞர். சேனே முறையின் படி ஆரம்ப செபத்தின் பின் இடம்பெற்ற செபமாலேத் தியானத்தை அருட்திரு. A. தேவதாஸன் அடிகள் அனே வரையும் பக்தியில் திளேக்கும் வண்ணம் ஒப்புக் கொடுத்தார். மனுக்குலத்தை அன்னேக்கு ஒப்புக் கொடுக்கும் ஜெபத்தை அனேவர்க்குமாக அருட்திரு. ருகல் அடிகள் ஒப்புக்கொடுக்க, அனேத்து மக்களும் அன்னேயின் சொருபத்திற்குப் பாடல் இசைத்து மலர் அஞ்சலி செய்தனர், அதைத் தொடர்ந்து ஆண்டகை அவர்களால் திருவுரை நற்கருணே ஆசீர்வாதம் வழங்கப்பட்ட பின் அன்னேயின் சொருபம் பவனியாக ஆலயத்தை சுற்றி எடுத்து வரப் பட்டு அன்னேயின் சொருப ஆசீருடன் விழா வழிபாடு முடிவுற்றது. விழாவை சிறப்பிக்க ஒன்று கூடிய அன்னேயின் மைந்தர்களுக்கு ஒரு தேநீர் விருந்தும் இடம் பெற்றது.

''வாழ்க என்னும் அன்னேயின் நாமம்''

**தொற்று நோய்களிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள விற்றமின் A தேவை. இது கரட், கீரை வகைகள், உருளேக் கிழங்கு, பால் ஆகியவற்றில் உள்ளது.**

வாழைப்பழம் சாப்பிடுங்கள். அதில் பொட்டாசியம் சத்து மிகுதியாக இருக்கிறது. அதனை அடிக்கடி உண்பவர்களுக்கு பக்கவாத நோய் உண்டாவதில்லை. ஆனால் சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கு இது ஏற்றதல்ல.

# மண்ணுக்குத் திரும்பும் மனிதனே!

● எஸ். ரி. ஸ்ரீபன்

விண்ணைப் படைத்த இறைவன் மண்ணையும் அவற்றிற்கு அழகு தரும் அனைத்தையும் படைத்து அவைகளைக் கீழ்ப்படுத்தி ஆண்டு அனுபவிக்கத் தன் சாயலிலே தன் வாழ்வு வாழ வாழ்த்தினர் எனக் கூறுகிறது வேதாகமம். பூமியின் எல்லாப்படைப்புக்களின் சிகரமாக ஏனைய படைப்புகளுக்கு இல்லாத ஞானமும் அறிவும் நன்மைத்தனமும் நிறைந்தவனுக மனிதனைப் படைத்தபின் 'சகலமும் மிகவும் நன்ருய் இருந்தன என மகிழ்ந்தார். புகழ்ந்தார் இறைவன் (ஆதி 1 : 3) 'உம் படைப்புகள் அனைத்தின் மீதும் அவனுக்கு அதிகாரம் தந்தீர்; அனைத்தையும் அவனுக்குப் பணியச் செய்தீர்; மாண்பையும் பெருமையையும் அவனுக்கு முடியாகச் சூட்டினீர்' என்ற சங்கீத வசனங்கள் (சங் 8 : 5,6) மனிதப் படைப்பின் மகிமையை மேலும் அலங்கரிக்கின்றன. எனவே உலகில் மனிதன் அனைத்திற்கும் மேலான அந்தஸ்த்தில் நிலைப்படுத்தப் பட்டான் என்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

மனிதனைப் படைத்த இறைவன் அவனது உணவாக காய், கனி, இலை, தானியம் முதலானவைகளைக் கொடுத்ததோடு நின்றுவிடாது அவனது உணவு உபயோகத்திற்காக உயிரினங்களையும் ஏற்படுத்தினர் என்ற உண்மை 'இதனை உங்களுக்கு உணவாகத் தந்துள்ளோம்' என்ற இறைவனது வாக்கினுல் நிருபணமாகின்றது. (ஆதி 9 : 3) எனினும் மனிதன் தன் இஸ்டப்படி உயிரினங்களை உபயோகிப்பதில் கடவுளின் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளான் என்பதையும் வேதாகமம் விபரிக்கின்றது. ஆகவே உயிரினங்களை இஸ்டப்படி தேவையற்ற பொழுது அழிப்பதோ அன்றில் உபயோகிப்பதோ இறைவனுக்கெதிராகப் புரியும் குற்றமாகும் இதனைமையமாகக் கொண்டே புத்தபிரான் 'உயிர்களிடத்தில் அன்பு செய்யுங்கள்' என்ருர்,

இவ்வாருக உயிரினங்களையே பாதுகாக்கும் இறைவன் தன் சாயலிலே படைக்கப்பட்ட மனிதனை எவ்வளவு அக்கறையுடன் பாதுகாப்பார் என்பதை ஒவ்வொரு மனிதனும் சிந்தித்தாக வேண்டும். படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் தன்னை வணங்க என்ற கூற்றுக்கு அமைவாக மனிதன் கடவுளுக்காக கடவுளாலே; கடவுளின் சாயலிலே படைக்கப்பட்டு கடவுளோடு இணைக்கப்பட்டுள்ளான். அதனுல் தான் 'கடவுள் மனிதனுகலாம்; மனிதனும் தெய்வமாகலாம்' என்கின்றனர். அந்த அந்தஸ்த்தில் உள்ள மனிதனை மனிதன் அழிப்பது என்பதுஎத்துணை கொடிய செயல் 'கொலை செய்யாதே' என்பது படைத்தவன் இட்ட பத்துக்கட்டளைகளில் ஒன்று. மனிதன் தேவசாயலிலே உண்டாக்கப்பட்டபடியால் 'மனிதனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிருனே அவனுடைய இரத்தம் மனிதனுலே சிந்தப்படக்கடவது' என்ருர் இறைவன் (ஆதி 9 : 6) இதே நோக்கில் இறைமகன் யேசு 'வாள்எடுத்தவன் வாளாலே மடிவான், என்ருர் (மத் 26 : 52)

ஆதியிலிருந்தே இறைவன் அன்பு செய்தார் மனிதனே அதை உணரவில்லை. பாவத்தில் மூழ்கிய மனிதனுல் மனித குலத்துக்கு மரணம் சன்மானமாயிற்று. குற்றம் புரிந்த அன்றே அவன் சாகவில்லை. ஆனல் தன்னுல் நிலையான வாழ்வு வாழ முடியும் என்ற அவனது நம்பிக்கை இறந்தது.

இன்றைய மனிதனிடத்தில் எவ்வளவு சுயநலம், பொறாமை, தற்பெருமை குடி கொண்டிருக்கின்றன. இதனுல் விளையும் துன்ப துயரங்களை மனிதன் உணர்வதாக இல்லை. இக்கொடிய குணங்கள் எங்குள்ளதோ அங்கே அன்பில்லை. அன்பில்லா நெஞ்சு சினம் கொள்ளும், சினம் கொள்ளும் உள்ளத்திலே நீதியையும். நேர்மையையும் காணமுடியாது. இறைவனுக்கு ஒவ்வாத செயலையே செய்யத் தூண்டும். பொறாமையினுல் சினம் கொண்ட காயீன் ஆண்டவன் அன்பிலே வளர்ந்த அவனது உடன் பிறப்பான தம்பி ஆபேலைக் கொலை செய்தான். இக்கொடிய செயலின் நிமித்தம் காயீன் உயிரோடிருக்கும் வரை ஆண்டவனுல் சபிக்கப்பட்டான் என வேதாகமம் கூறுகிறது.

சினம் அழிவின் சிகரமாகும். ஆகவேதான் 'ஆறுவது சினம்' எனப் பாடி சினத்தை அடக்கக் கற்பித்துள்ளார் மூதறிஞர் ஔவைப் பிராட்டியார் சுயநலம் சுயரூபம் எடுக்கும் போது ஆணவம் தலைதூக்கிறது. அடக்குமுறை அதிகாரம் செய்கிறது. இதன் நிமித்தம் துன்பங்களும் துயரங்களும் தொடர் கதையாகின்றது. இந்நிலை இன்றைய அரசியல் அரங்கிலே மலிந்து கிடப்பதைக் காணலாம். இதிகாசங்களை, புராணங்களைப் புரட்டினுலும் இந்நிலையே முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதை அவதானிக்கலாம். சேர, சோழ, பாண்டிய நாடுகள் பரஸ்பர அன்பற்ற நிலையால் அஸ்தமித்தன. தற்பெருமை, சர்வதிகாரி கிட்லரையே அழித்தது. சுயநலம் எத்தனையோ அரசுகளை ஆட்டம் காணவைத்தது.

உலக அரங்கிலே, அரசியலிலே மனநீதி, மனித நீதி மறுக்கப்படும் போதெல்லாம் எழும் பயங்கரச் சீர்கேடுகளையும் அழிவுகளையும் துயரங்களையும் கடின உள்ளங்கள் உணர்வதில்லை. முக்கியமாக எதேச்சதிகார ஒருதலைப் பட்சமான அரசியல் அமைப்புக்களால் தோன்றும் கொடுமைகள் ஏராளம், மனித உள்ளம் நான் என்ற மமதைக் கோட்டை விட்டு நாம், நமது என்ற பொதுக்கோட்டில் நிற்குமானுல் 'உன்னைப் போல் உன் அயலானையும் நேசி' என அண்ணல் யேசு கூறியதற்கேற்ப மனித சமுதாயம் நடக்குமானுல் ஏன் இந்தக் கண்ணீர்?

உலகில் இன்று மனித உற்பத்தி வேகத்தை விட ஆயுத உற்பத்தியே அதிகரிக்கும் நிலையில் எப்படி நாட்டில் அமைதியைக் காணமுடியும்? ஆயுதங்கள் ஆக்க பூர்வ செயல்களுக்குப் பயன்படுவதைவிட அழிவுக்கே பயன்படுத்தப்படும் பொழுது எப்படி எமக்கு சந்தோஷமான வாழ்வு கிட்டும்?

ஒவ்வொரு மனிதனும் உலகில் சமநீதியோடு வாழத்தகுதி பெற்றவனுக இருக்கின்றுன். அது ஆண்டவனின் அருங்கொடையாகும். ஆகையால் அவனது நீதி நிலைபெற வேண்டும். நீதி இன்றேல் அன்பில்லை, சுக வாழ்வு இல்லை. எனவேதான் 'நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராட்சியம் அவர்களுடையது' என்ருர் அன்பினுக்கு இலக்கணமான இயேசு. (மத் 5 : 6, 10) மனிதனே! நீயும் நானும் மண்ணுயிருக்கின்ருேம். நிச்சயம் ஒரு நாள் மண்ணுக்குத் திரும்புவோம். ஏனெனில் நாம் மண்ணுலே படைக்கப்பட்டவர்கள் ஆகவே நாம் வாழும்வரை வாழ்வது வாழவைத்த தெய்வத்திற்காக என்ற மனுேநிலை பிறக்கட்டும், அவலங்கள் அழுகுரல்கள் மறையட்டும், உண்மை நிலையிதுவென உலகம் உணரட்டும், உள்ளங்கள் மலர கள்ளமில்லா அலையோடு அமைதியென்னும் ஒளி மண்ணுலகில் நிலைக்கட்டும்.

# இரவலும்

## செ. குணரத்தினம்

● இராவணனின் அழிவிற்குக் ''காரணம் ஒரு நரை மயிர்தான் என்றால் நம்ப முடிகிறதா'' இராமாயணம் அப்படித் தான் சொல்கிறது.

தசரதன் ஒருநாள் கண்ணாடியில் முகம் பார்க்கிறான் காதோரம் ஒரு நரை.

''மன்னனே பட்டத்தை மகனுக்குத் தந்துவிடு, நீ துறவு பூணவேண்டிய வயது இது'' என்று அந்த நரை தசரதன்காதில் இடித்துரைக்கிறதாம் கம்பன் இப்படிச் சொல்கிறான். நரையின் ஆலோசனையைக் கேட்கும் அறிவு தசரதனுக்கு இருந்தது. இயற்கை சூட்டிய வெள்ளிமுடியைக் கண்டதும் தங்க முடியைத் துறக்க முடிவு செய்கிறான்.

கவிஞர் அப்துல் ''ரகுமானின்''
'நதிகளே கரையாவதில்லை'
என்ற நூலிலிருந்து எடுத்தது.

**(இது அந்தக்காலமப்பா. ஆனால் இன்று முழு மயிரும் நரைத்திருத்தும் கூட அதற்கு டை பூசி விட்டல்லவா அரசியலை இங்கே தொடர்கிறார்கள்.)**

---

● ''எண்ணான்கு முப்பத்திரண்டு
பற்காட்டி இசையுடனே
பண்ணாகச் செந்தமிழ்பாடி
வந்தாலும் இப்பாரிலுள்ளோர்
அண்ணாந்து கேட்பர்! அழகு
அழகு என்பார்; அதன் பிறகு
சுண்ணாம்புபட்ட வெற்றிலையும்
கொடார்
கவி சொன்னவர்கே!''

பழைய இலக்கியத்தில் தனிப்பாடல் திரட்டில் இடம் பெற்ற இந்தப் பாடலைப் பாடியவர் இராமானுஜப் புலவராகும். பாட்டை ரசித்து ஆஹா ஆஹா என்று கேட்பார்கள். பிறகு சுண்ணாம்பு பட்ட வெற்றிலையும் கொடுக்க மாட்டார்கள் என்பது இதன் கருத்து.

**(இப்படியான ரசிகர்பரம்பரை அந்தக்காலத்தில் இருந்ததைவிட இந்தக் காலத்தில் தான் அதிகம். கவிஞன் என்று சொல்ல வறுமையும் ஒரு சாட்சியாக நிற்கும். இப்படியான கவிஞர்களை அழைத்து கவியரங்கை ஏற்பாடு செய்பவர்கள் கவிஞர்களுக்கு ஏதாவது சன்மானம் கொடுக்கவேண்டும், அப்படிச் செய்யாமல் விடுவதனால்தான் நம்மத்தியில் கவிஞனுக்கும் மதிப்பில்லை. கவியரங்கிற்கும் செல்வாக்கில்லை. வானொலி / தொலைக்காட்சி சேவைகளை மாத்திரம் பாராட்டலாம்.)**

---

● ''ஓடையிலே என் சாம்பர் ஓடும் போதும்
ஒண்டமிழே சலசலத்து ஓடவேண்டும்
பாடையிலே என்னுடலும் போகும் போதும்
பைந்தமிழில் அழும் ஓசை கேட்க வேண்டும்.

இந்தக் கவிதை தமிழரசுக்கட்சி கொடி கட்டிப்பறந்த வேளையில் பலராலும் மேடைகளில் எடுத்துக் காட்டப்பட்டதை பழையவர்கள் மறந்திருக்க மாட்டார்கள், இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தக்கவிதையை யாத்தவர் கவிஞர் காசி தான் என்பது பலரது எண்ணம். மேடைகளில் கூட காசியின் கவிதையென்றே சொல்லி வந்தார்கள், ஆனால் இந்தக் கவிதைக்குரிய கவிஞர் மறைந்த இராசபாரதி தான். தமிழ் நாட்டுக் கவிஞர் 'சுரதா' கூட இப்படியான ஒரு கவிஞன் ஈழத்திலே இருக்கிறானா! என்று ஆச்சரியமடைந்தாராம்.

**(இப்படியான ஒரு கவிதையைப் பாடிய கவிஞன் பாடையிலே ஏறவில்லை. ஓடையிலே அவன் சாம்பரைக் கரைக்கவில்லை. ஆனாலும் அழுகிய நிலையில் ஓடையில் மாத்திரம் மிதந்தான் எழுதுபவர்களின் வாழ்வு எழுதுவதைப்போல அமைவதில்லை என்றாலும் அவன் காணும் கனவுகளில் ஒரு துளியாவது அவன் வாழ்வில் இடம் பெற்று விடுகிறது என்பதற்கு ஓடையிலே மிதந்த ராஜபாரதியின் முடிவும் ஓர் எடுத்துக்காட்டு.)**

# திருவலும்!

# உன்னையே நீ நம்பு

✶ ந. பார்த்திபன்

உங்கள் நடத்தை எப்படியோ அப்படியேதான் உங்களுக்குப் பிறக்கும் குழந்தையின் நடத்தையும் இருக்கும். உங்கள் குழந்தை நல்ல பழக்க வழக்கங்களுடன் வளர நீங்கள் விரும்பினுல் உங்கள் பழக்க வழக்கங்கள் நல்லவையாக இருக்கும் படி பார்த்துக்கொள்ளுங்கள்.

யாரையும் சந்தேகிக்கலாம். உன்னை நீயே சந்தேகிக்கக் கூடாதென்ற ஒரு தத்துவம் உண்டு. எங்களை நாங்களே சந்தேகப்படுவதை விடுத்து, எங்களை, எங்களுடைய இயலுமையை வளர்த்துக் கொண்டு, இது என்னுல் முடியும் என்று முயற்சி செய்வதே தன்னம்பிக்கை யாகும். என்னுல் முடியாதெனில் வேறுயாரா லும் முடியாதென்று உன்னை நீ நம்பிக்கொள். நம்பிக்கை நெஞ்சில் வை தித்திக்கும் உன் வாழ்க்கை. இந்நம்பிக்கை உங்கள் மீது வைக்கும்போது அது தன்னம்பிக்கை ஆகின்றது.

முடியாதென்ற வார்த்தைய்யை அகராதி யில் இருந்து அகற்று என்றுன் நெப்போலியன். அவனுடைய தன்னம்பிக்கையை அறிந்து கொள்ளுங்கள். சாதாரண விவசாயக் குடும் பத்தில் ஏழை விவசாயியின் மகனுகப் பிறந் தவன், உலக வீரனுனது எப்படி என்று சிந்தியுங்கள். அவன் விடாமுயற்சியை புரிந்து கொள்ளுங்கள். நான் ஒரு விவசாயியின் மகன் தானே எனக்கு எப்படித் தெரியப்போகுது போராட்டம் என்று ஒதுங்கவில்லை. நாட்டைக் காக்கும் சாதாரண போர் வீரனுகச் சேர்ந்த வன். படிப்படியாக முன்னேறிப் பிரான்சின் தன்னிகரில்லாத் தலைவன் ஆனுன். அவன் தன்னம்பிக்கையே காரணம்.

ஒரு முறை நெப்போலியன் தன் இராணு வத் தளபதியுடன் படைகளை ஒழுங்குபடுத்தி புறப்படத் தயாராகும்படி கட்டளை இட்டான். இராணுவத் தளபதியோ நாங்கள் ஐம்பதினு யிரம் பேர் தான். எதிரிகளோ ஒரு இலட்சம் பேர் என்று தயங்கித் தயங்கிக் கூறியபோது, அப்ப நாங்கள் ஒரு இலட்சத்தி ஐம்பதினுயி ரம் பேர் என்றுனும் நெப்போலியன். ஆம் அவன் தன்னை ஒரு இலட்சம் பேருக்கு சம னென்று கணித்தான். சதாரண ஏழை விவ சாயியின் மகனுக்கு எப்படி இந்தத்துணிச்சல் வந்தது. அவனுடைய தன்னம்பிக்கையும், முயற்சியும் தான்.

உங்கள் கண்முன்னே, உங்கள் காலப் பகுதியிலேயே ஏன் உங்களோடு பழகியவர் களைப் பாருங்கள். அவர்களில் எத்தனை பேர் எவ்வாறு முன்னேறினுர்கள் என்று அவதானி யுங்கள். சிறு துளி பெருவெள்ளம் போல், படிப்படியாக வளர்ந்தவர்கள் தான் அனை வரும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒரே நாளில் ஒரு பெரிய ஆலமரம் வளர வில்லை. ஒரே நாளில் ஒரு பத்து மாடிக்கட்டி டம் உருவாகவில்லை. ஒவ்வொரு கற்களாக அடுக்கப்பட்டதுதான் அந்தக் கட்டிடம். முன் னேற்றமும் அவ்வாறுனதே. அம்முன்னேற்றம் எங்கள் தன்நம்பிக்கையின் காரணமாகவே உருவாகிறது.

ஒரு கிராமத்தில் உள்ள சிறுவனிடம் அடுத்த இடத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் கேட்டாராம் தம்பி! இந்த ஊரில் யாரும் பெரியவர்கள் பிறந்திருக்கிறுர்களோ என்று. அதற்கு அந்தச் சிறுவன் பெரியவங்களா எப்படிப் பிறக்க முடியும். இவ்வளவு சின்ன வங்களாகத்தான் பிறக்க முடியும் என்று தன் கையினுல்ஒரு குழந்தைஅளவைக்காட்டினுனும்.

அந்தப் பெரியவருக்கு இப்போது ஒரு உண்மை தெரிந்தது. ஆம். பிறக்கும் போது பெரியோராய்ப் பிறந்தவர் இல்லை. அப்படியெனின் பெரியோர்கள் ஆனவர்கள், எப்படி உருவானுர்கள்? அவர்களின் வரலாறு உங்களுக்குப் பாடமாகட்டும் படியுங்கள்.

இன்று உலக நாடுகளை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் வல்லரசுகளில் ஒன்ருன அமெரிக்காவின் முதல் ஜனுதிபதி ஆபிரகாம் லிங்கனை எண்ணிப் பாருங்கள். சொந்தமாக ஒரு புத்தகம் வாங்கிப் படிக்க வசதியில்லாமல் இருந்தவர் அமெரிக்க ஜனுதிபதியானுர் நம்ப முடிகிறதா? ஆம் நம்புங்கள். விடாமுயற்சியுடன் வாழ்ந்தவர்கள் யாருமே சோடை போகவில்லை. தன்னம்பிக்கையோடு வாழ்ந்தவர்கள் யாருமே ஏமாந்ததில்லை என்பதைப் புரிந்திடலாம். வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடா என்ருன் ஒரு கவிஞன். நம் முன் நாம் முன்னேறப் பாடங்கள் ஏராளம்.

இரவல் புத்தகத்தைப் படித்துவிட்டு, யன்னலோரம் வைத்துப் படுத்ததனுல், அது மழையில் நனைந்து, திரும்பக் கொடுக்க முடியாமல் கவலைப்பட்ட ஒரு ஏழைதான் ஆபிரகாம் லிங்கன். தெருவிளக்கு வெளிச்சத்தில் படித்து முன்னேறியவர்கள் எத்தனையோ பேர். நாங்கள் ஒதுங்கிக் கொண்டு, எங்களால் அது முடியாதென்று ஒரு அபிப்பிராயத்தை ஏற்படுத்தி, பின்வாங்குகின்ருேம். உலக வரலாறு 100% தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் கொண்டவர்களின் சரித்திரமே.

பலர் அதிஸ்டத்தைப் பெரிதாக நம்பிக் கொள்வார்கள். அமெரிக்காவில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களில் முன்னேறியவர்கள் கொடுத்த தகவல் நாம் 1% தான் அதிஸ்டத்தை நம்பினேம் என்பதே. ஒரு தத்துவ ஞானியிடம் நீங்கள் அதிஸ்டத்தை நம்புகிறீங்களோ என்று கேட்டதும், ஆம் நான் நம்புகிறேன். அடுத்தவர்களின் வெற்றியெல்லாம் அதிஸ்டமில்லாமல் வேறென்ன என்ருர். அவர் தான் நம்பவில்லை என்றே அந்த விடையை நாம் எடுத்துக் கொள்ளலாம்.

நான் ஏன் பிறந்தேன் என்ற தொடர் கட்டுரையில் தன் சுயசரிதையை எழுதிய எம் ஜி. ஆர் அதில் தன் சகோதரங்கள் புத்தியுள்ளவர்கள். புத்தியுள்ளவர்கள் பிறந்த குறுகிய காலத்தில் இறப்பார்களாம். ஏனெனில் இந்தப் பூமியில் வாழ விரும்பாமல் அல்லது வாழமுடியாமல், அன்று அந்தக் கட்டுரையில் எம். ஜி. ஆர் எழுதியது மிகவும் மனம் நொந்த நிலையில் வறுமையும், பிணியும் தன் சகோதரங்களைப் பிரிக்கக்கூடாத சிறிய வயதில் பிரித்து விட்டதே என்று. அவர்கள் வறுமையினுல் இறந்தபோது இந்தியா சென்றவர். பின் எப்படி முதலமைச்சரானுர்? எப்படி இந்தியா வாழ் தமிழ் மக்கள் மட்டுமல்லாது உலகத்தமிழர்களின் மனங்களைக் கவர்ந்தார்.

நாடகங்களிலும், படங்களிலும் சாமரம் வீசுபவராகவும், வாயிற் காவலனுகவும் இருந்தவர், உலகம் சுற்றும் வாலிபனுகி உலகெங்கும் தன் கொள்கையைப் பரப்பினுர் சினிமாவினுல். அவருடைய தன்னம்பிக்கை வீணுகவில்லை. அவருடைய விடாமுயற்சி அவரைக் கைவிடவில்லை. அவரின் நிலை முன்னேறத் துடிப்பவர்களுக்கு ஒரு பாடமாகட்டும். இன்று சினிமா உலகில் கொடிகட்டிப் பறப்பவர்களும். கோடீஸ்வரர்களும் ஒரு வாய் சோற்றுக்கு தாங்கள் ஓலமிட்டதாகக் கூறுகிருர்களே. ஏன் நீங்கள் உயர முடியாது, உன்னதமாக முடியாது.? துணிந்தால் துயரமில்லை துக்கமில்லை. துணியுங்கள்.

### மருத்துவம்

மூல நோய்க்கு ஒட்டகத் துத்திக் கீரையில் நெய்விட்டு வதக்கி பாசிப் பருப்புடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் மூல நோய் கட்டுப்படும் என்று மூலிகை வைத்தியர் கூறுகின்றனர். ஒட்டகத் துத்திக்கீரை தன்னிச்சையாக வளர்வது தோட்டுப்பூக் கீரை என்றும் இதைச் சொல்வர்.

பலருடைய நினைப்பில் தலைவர்களும், புகழ் அடைந்தவர்களும் பரம்பரை இயல்புடன் பரம்பரை பரம்பரையாக வந்தவர்கள் என்று பேசிக் கொள்வதுண்டு. ஆனால் வரலாறுகள் அதைமாற்றி அமைத்திருப்பதை நாங்கள் பார்க்கக் கூடியதாய் இருக்கிறதே. இவ்வரலாறுகள் வாசித்து, கேட்டு வெறுமனே அறிய எழுதப்பட்டதல்ல. அதை உதாரணமாகக் கொண்டு நாங்கள் முன்னேற நல்ல நிலைக்கு வர எழுதப்பட்டதே. அவர்களால் முடிந்தது ஏன் எங்களால் முடியாதோ? என்று சிந்தித்துச் செயல்படுவோம்.

மலையக மக்களின் தலைவனாகி, இன்று தமிழ் மக்களின் நம்பிக்கைக் குரியவராகி அரசைத் தன் கோரிக்கைகளுக்கெல்லாம் தலைசாய்க்கும் படி சாதனை படைக்கும், மலையக மக்களின் தொண்டர் தொண்டமான் தன்னுடைய வரலாற்றிலே தான் ஒரு ஏழைத் தோட்டத் தொழிலாளியின் மகனென்றே கூறியிருக்கிறார். அவர் எப்படி நம்பிக்கைக் குரிய தலைவனானதும் இன்று மாபெரும் புகழடைந்ததையும் சிந்தியுங்கள். அடுத்து முயன்றால் ஆகாத தொன்றில்லை. முயற்சி திருவினையாக்கும். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார். எனவே தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் ஆயுதமாக ஏந்தி வாழ்க்கைப் போரை வெற்றியுடன் நடத்துவோம்.

இன்று ஜனாதிபதியான பிரதமர் பிரேமதாச ஆரம்பத்தில் மிகவும் வசதிகுறைந்த குடும்பத்தில் பிறந்தவர்தானே. சிறு சிறு பதவிகளின் மூலம் படிப்படியாக முன்னேறியவர் இன்று நாட்டின் தலைவர் ராஜ வம்சத்தினாலோ அல்லது பரம்பரைத் தலைமைத் துவத்தினாலோ தான் ஒருவர் ஒரு நாட்டின் தலைமைப் பதவியை அமைக்க வேண்டியதில்லை என்பதை தனது உழைப்பாலே முறியடித்து முன்னேறியவர். எங்கள் கண்முன்னே தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் எவ்வளவு இன்றியமையாதது என்பதையும், அதனால் வெற்றியின் உச்சிக்கே போனவர்களையும் பாருங்கள்; பண்படுங்கள்.

உலக சாதனைகள் படைத்தால் அது கின்னஸ் புத்தகத்தில் பதியப்படும். அவ்வாறு கின்னஸ் புத்தகத்தில் அதிக தடவை தன்னுடைய பெயரைப் பதிவு செய்து பலரும் அறியும் வகையில் இருந்தவர் இலங்கையில் பிறந்த ஆழிக் குமரன் ஆனந்தன். அவருடன் சமகாலத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர்கள் சொன்ன தகவல்கள் மூலம் அவர் சலிக்காத மனம் படைத்தவர். எப்போதும் பயிற்சியுடன் இருப்பார். அதன் விளைவு உலக சாதனையிலும் ஒரு சாதனையாளரானார். நீங்கள் ஒரு சாதனையாளராக மாறவேண்டுமா? வேண்டாமா?

இது எங்களால் முடியாது என்று மற்றவர்கள் செய்வதைப் பார்வையாளராய் நின்று பார்ப்பதால் ரசிப்பதால் நாங்கள் வலது குறைந்தோராய் மாறுகின்றோம். பங்காளராய் இருங்கள், பார்வையாளராய் வேண்டாம் என்பார்கள் அறிஞர்கள். நாங்கள் பார்வையாளராய் மாறுவதால் இயலாமை, பின்னடைவு சோர்வு எங்களோடுசேர்ந்து விடுகிறது. இந்த மனநிலையை மாற்ற வேண்டும். நாங்களும் பத்து மாதத்தில் தானே பிறந்தோம் என பலர் வீரப் பாய்ப் பேசுவதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இதன் அர்த்தம் பிறப்பு எல்லோருக்கும் ஒரே மாதிரி இதில் சிலர் எல்லாவற்றிலும் வெற்றி காண பலர் தோல்வி காணுவது ஏன்? முயற்சியின்மையே.

நீந்த வேண்டுமென நினைத்துக் கொண்டிராமல், நீரில் இறங்குங்கள். நீந்த முடியும் நீந்தலாம். மனதில் ஆசைத் தீயை மூட்டி, இது என்னால் முடியும், இதை நான் செய்ய வேண்டும், இதனால் நான் வளர்ச்சி அடைவேன் என்ற எண்ணங்களை மனதில் அடிக்கடி சொல்லி, நினைக்கும் போது அதுவே ஒரு உத்வேகத்தைக் கொடுத்து உயர்ச்சிக்கு வழி வகுக்கும் என்கிறார் தத்துவஞானி டாக்டர் எம். எஸ், உதயமூர்த்தி. சொல்பவன் போதிக்கிறான், செய்பவன் தான் சாதிக்கிறான் எனவே செய்யுங்கள்.

**ஒன்றுக்காக ஒன்றைக் கோபித்துக் கொண்டால் நிம்மதியை இழப்பது தான் மிஞ்சும்.**

## ஆறடி நிலம்

என்னுடைய
இறுதி நாட்களிலாவது
சுகமாகத் தூங்க
ஓர்
ஆறடிநிலம்
சுடலையில் இருக்குமென்று
இவ்வளவுகாலமும்
எண்ணியிருந்தேன்!
இப்போது
அந்த நிலம்
நான்
போகுமிடமெல்லாம்
வருகிறது!
எந்த இடத்தில்
தூங்குவேன் என்பதை
என்னால்
நிச்சயமாகச்
சொல்லமுடிய வில்லை!

★ அமிர்தகழியான்

## ஒரு தீர்ப்பைத்தேடி

நிமிடங்கள்
நாட்களை
விழுங்க
நாட்கள்
வாரங்களை
விழுங்க
வாரங்கள்
மாதங்களை
விழுங்க
மாதங்கள்
வருடங்களை
விழுங்க
வருடங்கள்
வயதுகளை
விழுங்க
வயதுகள்
வாழ்க்கையை
விழுங்க

பூரண சூரிய
கிராணம்போல
மரணப்பாம்பிடம்
மெல்ல...
மெல்ல...
விழுங்கப்பட்டு
உலகத்திலே
நன்மையே செய்யாமல்
இதுவரை; என்னை
கடந்துபோன
கணங்களை மதியாமல்
பாவ புண்ணிய
தீர்ப்புகளுக்காக
"கடவுளே"
உன்னையா நான்
சிறிது... சிறிதாய்
தினம்...தினம்
சேர்ந்து கொண்டிருக்கிறேன்

★ கவியாக்கம் : திலாவெளி கைலைநாதன்

## மானிடத்தின் தலைவிதியே!

மனித உயிர்களே
புவியீர்ப்பையும் மிஞ்சிவிட்டு
எங்குதான் செல்கின்றீர்?

காலதேவன் பதவியிலிருந்து
இராஜினாமாச் செய்து விட்டானும்
அதனால்தான் அவன் அனுமதியின்றி
உயிர்கள் பறிக்கப்படுகின்றதாம்.


ஓ மனிதத்துவமே! உன்
புனிதத்துவத்திற்கு என்ன நடந்தது?
மனித நேயமே! மனித நேயமே!
உனக்கு மரணச் சடங்கை
நடத்தி விட்டுத்தான் நாம்
செத்துக் கொண்டிருக்கிறோம்.

இதயங்களே! நீங்கள்
எரிமலையாய் வெடித்துச் சிதறக்
காரணம் என்ன?
இப்போதெல்லாம்
எலும்புக் கூடுகளுக்கும்
மண்டை ஓடுகளுக்கும்தான்
நிறைவான அமைதி

நாம் மட்டும்தான் இங்கு
ஜீவமரணப் போராட்டம்
நடத்துகின்றோம்:

★ 'தமிழ் நேசன்'

## மாணவர் பக்கம்



அப்போஸ்தலர் பணி

XVI

க. பொ. த. உயர்தரம்

### எருசலேமில் சின்னப்பர்

சின்னப்பருக்கு எருசலேமில் அமோக வரவேற்புக் கிடைக்கிறது. தன்னுடைய சாதனைகளைப்பற்றி புறமதத்தினரிடம் ஏற்பட்ட மனமாற்றம் பற்றி சின்னப்பர் விளக்கிக் கூறுகிறார். எருசலேம் வாழ் ஏழைகளுக்குச் சின்னப்பர் நிறையப் பணம் கொண்டு வந்திருந்தார். எருசலேமில் வாழ்ந்த யூதக் கிறிஸ்தவர்கள் சின்னப்பரை மதித்து அவருக்குரிய மரியாதையைச் செலுத்தினாலும், சின்னப்பர் புறவினத்தாரோடு நெருங்கிப் பழகுவதையும் யூதச் சட்டங்களை மறந்து விடும்படி அவர் போதிப்பதையும் அவர்களால் ஜீரணிக்க முடியவில்லை. எனவே அவர் கூறிய எல்லாவற்றையும் கேட்டு விட்டுப் பழையபடி யூதர்களின் சட்டத்தை புதுக்கிறிஸ்தவர்களும் அனுசரிக்க வேண்டும் என்று பிடிவாதம் கொண்டனர்.

### மூப்பர்களின் அறிவுரை

எருசலேம் திருச்சபைத் தலைவரான யாகப்பரும் ஏனைய மூப்பர்களும் சின்னப்பருக்கு நல்லதொரு அறிவுரை கூறினர். அதாவது அவர் இன்னும் ஒரு யூதர்தான் என்பதையும், மோயிசனின் சட்டங்களை ஏற்றுக் கொள்கின்றவர் என்பதையும், ஆலயத்தையும் அதன் சடங்குகளையும் அன்பு செய்கின்றவர் என்பதையும் நிரூபிக்க வேண்டும். அதற்காக அவர் ஆலயத்தில் ஒரு குறிப்பிட்ட சடங்கில் கலந்து கொள்ள வேண்டும். ஒரு வாக்குத்தத்தம் எடுக்க வேண்டும். தனக்கு மட்டுமல்ல வேறு நால்வருக்காகவும் பிரதிக்கினை எடுக்க வேண்டும். வேறு ஒருவருக்காக ஆலயச் சடங்குக்குரிய செலவை ஏற்பது புனிதமான செயலாகக் கருதப்பட்டது. சின்னப்பர் அவ்வாறு செய்தால் அது யூதர்களுக்கு ஒரு திருப்தியை, மன ஆறுதலைக் கொடுக்கக் கூடும். அவர் இன்னும்யூதர் தான் என்பதை மற்றவர்கள் உணர்ந்து கொள்வர்.

### தேவாலயக் கலவரம்

மூப்பர்கள் முன் வைத்த கருத்து நல்லதாகச் சின்னப்பருக்குப் பட்டது. சின்னப்பருக்கு வேண்டியது யூதக்கிறிஸ்தவர்களும், புற இனக் கிறிஸ்தவர்களும் ஒன்றுபட வேண்டும் என்பதே. எனவே மூப்பர்கள் கேட்டுக்கொண்டபடி, தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டு எருசலேம் தேவாலயத்தில் நுழைகின்றார். அவர்களது திட்டம் தோல்வியில் தான் முடிந்தது. அவரது எதிரிகள் அவரை வஞ்சம் தீர்க்கக் காத்திருந்தனர். சின்னப்பரைக் கண்டதும் சீறி எழுந்தனர். 'இந்த மனிதன் ஒரு புறவினத்தானை ஆலயத்துக்குள் கொண்டு வந்து ஆலயத்தை அசுத்தமாக்கி விட்டான்' என்று கூக்குரலிட்டனர். எபேசு நகரைச் சேர்ந்த துரோப்பீமு என்பவன்தான் சின்னப்பர் கொண்டு வந்த புறவினத்தான். அநேகமாக சின்னப்பர் புறவினத்தாருக்கு என ஒதுக்கப்பட்டிருந்த பகுதிக்குள்தான் அவனைக் கூட்டிச் சென்றிருப்பார். ஆலயத்தின் பரிசுத்த இடத்திற்குள் நிச்சயமாகக் கொண்டு சென்றிருக்க மாட்டார். ஆயினும் அவரைத் தீர்த்துக் கட்டவேண்டுமென திட்டமிட்டுக் காத்திருந்தவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக இருந்தது.

### சின்னப்பரைக் கைது செய்தல்

சின்னப்பர் கலகக்காரர்களால் சூழப்பட்டு வெளியே இழுத்துச் செல்லப்பட்டார். பாஸ்காத் திருவிழாவின் போது வழக்கமாக 24 மணிநேரமும் ஆலயம் உரோமைப் போர் வீரர்களால் காவல் செய்யப்பட்டதால், அங்கு என்ன நடந்தாலும் அவர்களால் கவனிக்க

முடிந்தது. யாராவது கொல்லப்பட்டால் பாஸ்கா விழா முடிந்து விடும். எனவே சின்னப்பரை மக்கள் கூட்டம் சூழ்ந்து தாக்கத் தொடங்கியதும் உரோமைப்போர் வீரர் வந்து கைது செய்து விட்டனர். அவர் விலங்கிடப்பட்டு இழுத்துச் செல்லப்பட்ட போது 'உம்மிடம் ஒன்று சொல்லட்டுமா? என்று படைத்தலைவனிடம் கேட்டபொழுது அவர் கிரேக்க மொழியில் பேசியதைக்கேட்டு படைத்தலைவன் ஆச்சரியப்பட்டான். சில காலத்திற்கு முன் ஒரு குழப்பத்தை உண்டாக்கி நாலாயிரம் கொள்ளைக் கூட்டத்தாரைப் பாலைவனத்திற்குக் கூட்டிச் சென்ற எகிப்தியன்தான் அவர் என நினைத்துக் கேட்டவனுக்கு, தான் தார்சு நகரைச் சேர்ந்த ஒரு யூதன் என்று பயமின்றிக் கூறினர். தன்னைக் கொல்லவந்த கூட்டத்தினருக்கு உரையாற்றப் படைத்தலைவனிடம் அனுமதி கேட்டார்.

## சின்னப்பர் உரை

கூட்டத்திற்கு உரையாற்ற சின்னப்பர் அனுமதியளிக்கப்பட்டார். அவர் அவர்களது மொழியான எபிரேய மொழியிலேயே உரையாற்றினர். உரையில் தனது பழைய வரலாறு பற்றியும் கிறிஸ்துவைச் சார்ந்தவர்களைத் தான் ஆரம்பத்தில் துன்புறுத்தியது பற்றியும் கூறுகிறார். தமஸ்கு அனுபவம் இரண்டாம் முறையாக இங்கு கூறப்படுகிறது. முதலில் குறிப்பிடாத ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடுகின்றார். அதாவது மனமாற்றத்திற்குப் பிறகு, தான் கண்ட ஒரு காட்சியைப் பற்றியும் அதில் எருசலேமை விட்டுப் புறப்பட்டுப் புறவினத்தாரிடம் போகும்படி ஆண்டவர் கூறியதையும் எடுத்துச் சொன்னர்.

புறவினத்தாருக்கு இறைவனின் திட்டத்தில் இடம் இருக்க முடியாது என்பதை திடமாக நம்பிய யூதர், தொடர்ந்தும் சின்னப்பரின் உரையைக் கேட்கப் பொறுமையில்லாதவர்களாகத் தங்களது ஆடைகளைக் கிழித்துக் கொண்டு புழுதியை வாரி இறைத்துக் கொண்டு 'அவன் ஒழியட்டும்' என்று கத்தினர். யூதச்சட்டத்தை மீறுபவர்களை அழிக்க இவ்வாறுதான் யூதர் செய்வார்.

## உரோமைக் குடிமகன்

தனது கைதியை அவர்கள் எதிர்ப்பதன் காரணத்தை அறிய விரும்பினன் படைத்தலைவன் லீசியர். எனவே சின்னப்பரைக் கோட்டைக்குள் எடுத்துச் சென்று கசையடி கொடுத்து உண்மையை வரவழைக்க விரும்பினன். விசாரணை எதுவுமின்றி, தீர்ப்பிடாமல் உரோமைக் குடிமகன் ஒருவனை சாட்டையால் அடிக்க உங்களுக்கு உரிமையுண்டா என்று சின்னப்பர் கேட்டதும் படைத்தலைவன் ஆச்சரியப்பட்டு, தானும் உரோமைக் குடிமகன் தான் என்றும் ஆனல் தனக்குக் குடியுரிமை பெறப் பெருந்தொகை தேவைப்பட்டது என்றும் கூறினன், அதற்கு சின்னப்பர் பெருமையுடன் 'எனக்கோ இது பிறப்புரிமை' என்றார்.

உரோமைக் குடியுரிமை பிறப்பாலும் வந்தது. பணம் கொடுத்தும் பெறமுடிந்தது. உரோமைக் குடிமகனுக்குப் பல சலுகைகள் இருந்தன. கைது செய்யப்பட்டபின் கசையால், தடியால் அடிக்கப்படக் கூடாது. அவர் தங்கும் சிறை துப்பரவாகவும், வெளித்தாக்குதல்களிலிருந்து காப்பாற்றக் கூடியதாகவும் அமைந்திருக்க வேண்டும். எல்லாவற்றையும் விடப் பெரிய சலுகை 'செசாருக்கு வழக்கை எடுத்துச் செல்க' என்று கூறக்கூடிய வாய்ப்புத்தான். அதை ஒருவர் கூறிவிட்டால் அவரை எப்படியாவது காப்பாற்றி செசார் முன்னிலையில் சமர்ப்பிக்க வேண்டும். சின்னப்பரும் தான் ஓர் உரோமைக் குடிமகன் என்ற சலுகையைப் பயன்படுத்தத் தவறவில்லை.

### நிலாவிற்கு இரவு பகல் உண்டா?

நிலாவிலும் பூமியைப் போல் இரவு பகல் உண்டு. ஆனல் இங்கு உள்ளது போல் 24 மணிநேரம் அல்ல. அங்கு ஒரு மாதம் நீடிக்கும். நிலாவில் சூரிய அஸ்தமனத்தைக் காணவேண்டுமென்றல் ஒரே இடத்தில் இரண்டு வாரங்கள் காத்திருக்க வேண்டும்.

## தலைமைச்சங்கத்தின் முன்

படைத்தலைவன் தனது இக்கட்டான நிலையிலிருந்து விடுபடவும், யூதர்கள் சாட்டிய குற்றம் என்ன என்பதை அறியவும் தலைமைச் சங்கத்திடம் அனுப்பிவைத்தான். தலைமைச் சங்கத்தின் முன் சின்னப்பர் உரையாற்றத் தொடங்கியதும். தலைமைக்குரு சின்னப்பரை வாயில் அறையும்படி அருகிலிருந்தவர்களுக்குக் கட்டளையிட்டான். அதற்கு சின்னப்பர் 'வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, கடவுளே உன்னை அடிப்பார்' என்று கூறுகின்றார். தலைமைக்குருவைப் பழித்த குற்றம் சின்னப்பர் மேல் சுமத்தப்பட்டபோது சின்னப்பர் தனக்கு அவர் தலைமைக்குரு என்று தெரியாமல்போய் விட்டது என்று கூறினார். அநேகமாக தலைமைக்குரு தமது பதவிக்குரிய உடையின்றி இருக்கலாம்.

தலைமைச் சங்கத்தாரில் ஒரு சிலர் பரிசேயர், ஒரு சிலர் சதுசேயர், சதுசேயர் மறுவாழ்வை விசுவசிப்பதில்லை சின்னப்பர் இதனைக் கருவாக வைத்துச் சமயோசிதமாக சபையை இரண்டாக பிரித்து விடுகின்றார். தன்னை ஒரு பரிசேயனாக வெளிப்படுத்தி பரிசேயருடைய நம்பிக்கையில்தான் தான் இத்தகைய நிலைக்குத் தீர்ப்பிடப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். சபை இரண்டு பட்டது. கலவரம் மூண்டது. லீசியா தனது படைவீரரை அனுப்பி சின்னப்பரை சபையின் நடுவிலிருந்து விடுவித்து கோட்டைக்குள் கொண்டு போகக் கட்டளையிட்டான்.

## செசாரியாவுக்குக் கொண்டு செல்லல்

ஏறக்குறைய 40 யூதர் சின்னப்பரைக் கொல்லாமல் உண்பதில்லை எனச் சபதம் செய்தனர். சின்னப்பரை மற்றுமொருதடவை தலைமைச்சங்கத்துக்குக் கொண்டு வரும்படி கருத்துத் தெரிவித்தனர். கொண்டு வரும் வழியில் அவரைத் தீர்த்துக்கட்டத் திட்டமிட்டனர். இந்தச் சதியை சின்னப்பரின் சகோதரியின் மகன் அறிந்து அதனைச் சின்னப்பரிடம் தெரிவித்தான்.சின்னப்பர் அதனைப் படைத்தலைவனுக்குச் சொல்ல, படைத்தலைவன் தனது கைதியை இழக்க மனமில்லாமல் இரவோடிரவாக 600 போர் வீரர்கள் அடங்கிய படையுடன், மிகுந்த பாதுகாப்புடன் செசாரியாவிலிருந்த உரோமை ஆளுநனிடம் அனுப்பிவைத்தான். ஆளுநனுக்கு அனுப்பிய கடிதத்தில் தன்னுடைய தவறுகளை மறைத்து உரோமைக் குடிமகனை மீட்பதில் தான்பட்ட சிரமத்தைப் பெரிதாகக் காட்டியுமிருந்தான்.

## வினாக்கள்

1. உரோமைக் குடியுரிமை என்றால் என்ன?
2. சின்னப்பரின் சகோதரியின் மகன் சின்னப்பருக்கு ஆற்றிய உதவி என்ன?
3. சின்னப்பர் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட விதத்தை விபரிக்க?
4. சின்னப்பருக்கெதிராகச் சாட்டப்பட்ட குற்றம் என்ன?
5. எருசலேம் மூப்பர்கள் சின்னப்பருக்குக் கூறிய அறிவுரை என்ன?
6. சின்னப்பரின் உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள் எப்பொழுது பொறுமையிழந்தனர்?
7. கடவுள் ஏன் சின்னப்பரை யூதரின் கொலைத் திட்டத்திலிருந்து காப்பாற்றினார்?
8. சந்தர்ப்பம் கூறுக: 'எனக்கோ இது பிறப்புரிமை'
9. சின்னப்பரும் ஏனைய நான்கு இளைஞர்களும் எத்தகைய யூதமத சடங்காசாரங்களில் பங்குபற்ற வேண்டுமென மூப்பர்கள் எதிர்பார்த்தனர்?

> இளைஞர்களுக்குப் பதினெட்டு வயதில் பேயும் பேரழகியாகத் தோன்றும்.
>
> ஜப்பானியப் பழமொழி

# மரணம் தோற்கும் மனிதம் வாழும்



**யா**ழ் மருத்துவபீடத்தின் உடற்கூற்றியல் தலைவர், வைத்திய கலாநிதி திருமதி. இராஜனி திராணகம அவர்கள் செப்டெம்பர் 21ம் திகதி மாலை 5:45 மணியளவில் கடமையில் இருந்து திரும்பும் போது மருத்துவ பீட வீதியில் கொலை வெறியர்களினால் கொடூரமாகக் கொல்லப்பட்டார். எங்கள் தாயை எங்கள் கண்முன்னாலே சுட்டுக் கொல்லும் போது தடுக்க முடியாமல் நின்ற கோழைப்பிள்ளைகள் நாங்கள் 500க்கும் மேற்பட்ட மருத்துவ மாணவர்களின் அன்பு அன்னை 5 நிமிடங்களுக்கு மேல் அனாதைப்பிணமாகச் சாலையில் கிடந்த காட்சி எங்கள் மனச் சாட்சியை மேலும் குற்றப்படுத்தியது.

- இவர், ஒரு சிங்களப் பேராசிரியர் திரு திராணகமவைத் திருமணம் செய்து இரண்டுபெண் குழந்தைகளுக்குத் தாயாக இருந்தபோதிலும், தமிழ் மக்கள்மீது அவர் கொண்ட பாசவேகம் அவர் இறக்கும் வரைக்கும் மோசம் போகவில்லை என்பதை உறுதிப்படுத்த எத்தனை எத்தனையோ!

- வசதிதேடிப் பலர், படித்தவர்கள் விலகி ஓடிய வேளையிலும் விடிவு காணாது விரக்தியின் விளிம்பில் தமிழ் மருத்துவ மாணவர்கள் தவித்த வேளையிலும் தமிழ் மக்களின் அரும்பெரும் சொத்தான கல்வியைத் தடுக்கவிடமாட்டேன். உயிர் போனாலும் ஊழியம் செய்வேன், நான் பிறந்த மண்ணுக்கே என்று மீண்டும் அறிவுக்கண்ணைத் திறக்க வந்த எங்கள் அம்மாவைச் செங்குருதியில் மிதக்கக் கண்டோம்.

- இனிமை காண நினைத்தவர் பிறர் துன்பம் கண்டு பதறினார். மற்றவர்களின் பாரச்சுமைகளைத் தன் தோளினால் தாங்கி ஆறுதல் அளித்தவர்.

- பாதிக்கப்பட்ட பெண்களின் மனித உரிமைகள் போன்ற பல மனிதாபிமான செயற்பாடுகளில் ஈடுபட்டு அடக்குமுறையை அடக்க நினைத்து, அடிமை விலங்கை உடைத்தெறிந்து, மரணத்தின் பீதியில் புத்திஜீவிகள் ஓடிஒதுங்கி ஒடுங்கிப் பதுங்குகையில் மரணம் விதியின் முடிவல்ல மனிதம் என்றும் நிலைக்கும் என்று இடித்துரைத்து பாய்ந்து பாய்ந்து எழுந்த யாழ் மருத்துவபீடத்தின் புள்ளிமான் வேட்டையாடப்பட்டது.

- வகுப்பறையிலே அரவணைத்துப் பாடம் சொல்லும் அன்னையுமாய், கண்டித்து நெறிப்படுத்துவதிலே தந்தையுமாய், தக்க வேளையில் ஒவ்வொரு தனிப்பட்ட மாணவர்களினதும் பிரச்சனைகளை அனுதாபத்துடன் அணுகி உகந்த அறிவுரை கூறும் சிநேகிதியுமாய், ஆடிப்பாடி விளையாடி குதூகலமூட்டுவதிலே தோழியுமாய் இருந்த எங்கள் தாய் தரையிலே வீழ்த்தப்பட்டார்,

R. S. ஜெயக்குமார் யாழ். மருத்துவ பீடம்

● யாழ் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காகவும், குறிப்பாக மாணவர்களின் கருத்துக்களைக் கண்டு ஆராய்ந்து அவர்களை அணுகி அவர்களுக்காகக்குரல் கொடுத்துத் துணிச்சலுடன்எந்தப்பயங்கரமான இடத்திலும், யார் முன்னிலையிலும் தன்னலம் கருதாது தன்னையே தமிழ் மாணவர்களுக்கு அர்ப்பணித்து மருத்துவ பீடத்திற்கு உயிர் கொடுத்த தாய்மையை உயிர் அற்ற மெய்யாகக் கண்டோம்.

● தனக்கென்று சில கொள்கைகளை மனதில் கொண்டவராகவும் நடைமுறைப்படுத்தியவராகவும் வாழ்ந்தபோதிலும், பல்கலைக்கழகக் கிறிஸ்தவ மாணவர்களுடன் தனது ஐக்கியத்தைப் பலப்படுத்திக் கொண்டு அவர்கள் மனதில் தனியான இடத்தை பெற்றுக் கொண்ட தென்னிந்தியத் திருச்சபையின் அங்கத்துவரான பரிவு மிகுந்த அம்மாவை கொன்று விட்டனர் கொடிய ஏரோதுக்கள்.

● மரண இறுதிச்சடங்கிலே அவரின் கணவன் வடித்த கண்ணீர் அவர்கள் இருவரும் எந்த அளவுக்கு ஐக்கியமாக சாதி, இன, மத பேதம் இன்றி கொள்கைகளில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழ்ந்திருக்கின்றனர் என்பதைச் சிந்திக்கத் தூண்டியது.

● ஓ அம்மா! எந்த இனத்திற்காகக் குரல் எழுப்பி ஓங்கிநின்றீரோஅந்தஇனமேஉன்னை ஊமையாக்கி உருக்குலையவைத்ததோ!

● ஓ தமிழ்ச் சமுதாயமே! கல்விமான்களையும், உரிமைக்குரல்களையும் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, தரம் கெட்ட படிப்பறிவற்ற முட்டாள் சமுதாயத்தையா உருவாக்கப் போகிறாய்?

● சாவை வென்ற யேசுவே! அநீதச் சாவுகளிலிருந்து நாம் விடுபடுவது எப்போது?

தாயின் இதயமே குழந்தையின் பள்ளிக்கூடம். அமெரிக்கா

### தி / புனித மரியாள் பேராலய மேய்ப்புப் பணிச் சபையின் 1989 ஆம் ஆண்டிற்கான

# பொதுக் கூட்டம்


மேற்படி கூட்டம் 16 - 09 - 89 அன்று காலை 10 : 30 மணிக்கு எலிபன்ற் ஹவுஸ் மண்டபத்தில் பங்குத் தந்தை அருட் திரு. பயஸ் பத்மராஜா அடிகளாரின் தலைமையில் ஒன்று கூடியது. இக் கூட்டத்திற்கு துறவற சபையினர், பக்திச் சபை அங்கத்தவர்கள், வலயப் பிரதிநிதிகள் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

ஆரம்ப நிகழ்ச்சியாக இறை வழிபாட்டு பஜனையைத் தொடர்ந்து பங்குத் தந்தை தலைமையுரை ஆற்றினார். அதனையடுத்து அருட் சகோதரி மேரி எலேன் அவர்களால் 'திருச்சபையும் பங்கு மக்களின் பணியும்' என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்றப்பட்டு சபையில் கலந்துரையாடப்பட்டது.

பின் செயலாளர் திரு. தா. பி சுப்பிரமணியம் அவர்களால் 1988 ஆம் ஆண்டின் பொதுக் கூட்டறிக்கையும், ஆண்டறிக்கையும், பொருளாளர் திரு. பி. அன்ரனி அவர்களால் நிதியறிக்கையும் வாசிக்கப்பட்டு சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அமைப்பு விதிகள் பற்றிய பிரேரணைகள் கலந்துரையாடப்பட்டு, செயலாளரால் நன்றியுரை கூறப்பட்டன.

இவற்றைத் தொடர்ந்து பகுதி 2வதாக 89 ஆம் ஆண்டிற்கான நிர்வாகத் தெரிவுகள் நடை பெற்றது.

தலைவர்:- பங்குத்தந்தை
செயலாளர்:-திரு. தா. பி. சுப்பிரமணியம்
து. செயலாளர்:- திரு. எஸ். ஜேசுதாசன்
பொருளாளர்:- செல்வி. யூபிறேசியா பல்தசார்.
ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



# சந்தனச் சிதறல்கள்

கோகிலா மகேந்திரன்

## 16

நேரந் தவறிய சாமக் கோழி ஒன்று மூச்சடக்கிக் குரலைத் தன்னுள் தக்க வைத்துக் கொண்டது.

கிரிஸ்ரோபர் ஒரு ''சாடிஸ்ற்'' என்பதைத் தான் ஒரு வைத்திய மாணவியாய் இருந்தும் இவ்வளவு காலமும் எப்படி உணராமல் இருந்தோம் என்பது மேரிக்குப் புரியவில்லை.

அவனது செயற்பாடுகள் ஒவ்வொன்றையும், விருப்பங்கள் ஒவ்வொன்றையும் இப்போது நினைத்துப் பார்த்தால் அவன் ஒரு ''சாடிஸ்ற்'' என்பது சந்தேகமின்றித் தெரிகிறது.

எங்கோ ஒரு புள் ஒலமாய்க் கூவிற்று. அது தன் துணையைத் தொலைத்ததோ? மேரிக்கு வாழ்வில் எல்லாமே தொலைந்து விட்டதான ஓர் உணர்வு.

கிரிஸ்ரோபர் இறுதியாய்த் தமது வீட்டிற்கு வந்திருந்தபொழுதை மீண்டும் நினைத்துப் பார்த்தாள்.

தன்னில் இருந்து குருதி வடிவதைத் தானே பார்த்து மகிழ்ந்தது போல் இருந்தான் திடீரென்று கேட்டான்.

''இப்ப... நான் உங்களிட்டை ஓர் அனுதாபத்தை எதிர் பார்த்துத் தான் வந்தனான்.''

எப்போதும் தன் நிலை, கௌரவம் இவைகளில் இருந்து கீழ் இறங்க விரும்பாத கிரிஸ்ரோபர் இப்படிக் கேட்பது அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

''என்ன மாதிரி அனுதாபம்?''

''எங்கடை வீட்டிலை இரண்டு நாளாய் ஒரு நேரந்தான் சாப்பிடினம்...''

அவளுக்குப் புரிந்தது. அவன் தொடர்ந்தான்.

''அப்பாக்கு இன்னும் 'பென்சன்' வரத் தொடங்கேல்லை. கடன்தாற நிலையிலை அயல் வீட்டுக்காறர் ஒருதரும் இல்லை. எல்லாரும் இருபது ரூபாய்க்குத் தானே அரிசி வாங்கினம்... உருளைக்கிழங்கு, சீனி எல்லாம் விலை கூடிட்டுது...''

''உங்களுக்கு எவ்வளவு தேவை?''

''ஆயிரம் ரூபா தந்தீங்க எண்டால் பெரிய உதவியாய் இருக்கும். அப்பா எடுத்த உடனை திருப்பித் தருவன்...''

மேரி மனதுக்குள் குளிர்ந்தனள் என்று தான் சொல்ல வேண்டும். கிரிஸ்ரோபருக்கு உதவக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுவதை அவள் உண்மையில் விரும்பினாள்.

அவள் மனதின் உள்ளே ஒரு நம்பிக்கைக் கதிரொளி ஆவல் தோய்ந்த வண்ணங்களை அழகு மயமாய் சித்தரிக்கிறது.

அண்ணா சவூதிக்குப் போக முன்னர் கைச் செலவுக்கென அவளிடம் தந்து விட்டுச் சென்ற பணத்தில் ஆயிரம் ரூபாவை உடனே எடுத்து வந்து கிரிஸ்ரோபரிடம் தந்தாள்.

நன்றி கூறிப் பணத்தைப் பெற்றுக் கொண்டவன் ''குகநாதன்'' சேரைக் காணேல்லையோ? என்று கேட்டான்.

> பணத்தைக் கொண்டு நாயை விலைக்கு வாங்கி விடலாம். ஆனால் அதன் அன்பாகிய வாலாட்டுதலை வாங்க இயலாது.
>
> இட்ஸ்

அந்தக் குத்தல் அவள் முகத்தைச் சிவக்கச் செய்தது.

''அந்த உறவு முடிவுக்கு வந்தது உங்களுக்குத் தெரியுந்தானே?''

''ஏன்?'' கிரிஸ்ரோபர் உண்மையில் அதிர்ந்து போனவன் போலக் கேட்டான்.

''தெரியாதே... குகநாதனைப் பற்றி நீங்கள் சொன்ன அபிப்பிராயம் சரி எண்டு நான் ஒரு நாள் விளங்கிக் கொண்டன். நான் விளங்கிக்கொண்டன் எண்டு அவருக்கும் விளங்கிட்டுது...''

''தலையும் நரைச்ச பிறகு ஒரு கலியாணமும் செய்திட்டார்''

''ஆனல் அவர் எதையும் ஒப்ரிமிஸ்ரிக்காகத்தான் எடுப்பார். ஒரு நாள் தலைமயிர் நரைத்துவிட்டதைப் பற்றி என்னேடை கதைச்சவர்... நீங்கள் ''டை'' பாவிக்கலாம் எண்டு நான் சொன்னன் அவர் சொன்னர் ''டை பாவிக்கிறது தோலுக்கு நட்டம். நாங்கள் டொக்ரெஸ் தெரிஞ்சு கொண்டு அப்பிடிச் செய்யப்பிடாது. மற்றது தலைமயிர் நரைக்கிறதிலும் நன்மை இருக்கு எண்டார்...''

''என்ன நன்மையாம்?''

''தலைமயிர் கொஞ்சம் நரைச்சிருந்தாத்தான்... அவை சொல்ற சொல்லுக்குச் சமூகத்திலை மதிப்பு இருக்குமாம். ரசல் முந்திச் சொன்ன மாதிரிச் சொன்னர்...''

அவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் சங்கக்கடைக் கியூவுக்குப் போயிருந்த அப்பா அரிசி உடன் திரும்பி வந்தார்.

''பிள்ளை மேரி... உங்கடை குகநாதன்...'' மேரி எழுந்து வெளியே வந்தாள்.

''அவற்றை பொம்பிளை ...தற்கொலை செய்திட்டுதாம்... ரவி சொல்லிட்டுப் போறன்...''

''ஏனும்?'' மேரி அதிர்ந்தாள்.

''இதெல்லாம் கேக்கிற கேள்வியே மோனை... பார்க்கலாம்... இசச்குப் பிசக்கா ஏதோ நடத்திட்டுது போலை... மனிசி அவமானம் தாங்க மாட்டாமல் ஏதோ குடிச்சிட்டுது...''

மேரி திரும்பவும் உள்ளே வந்து அமர்ந்தாள். அவள் கண்கள் ஒரு புள்ளியில் நிலைத்திருந்தன. அந்த நிலை அவள் மிகவும் அதிர்ச்சி அடைந்திருந்ததைச் சுட்டியது.

''விழுந்த ஞாயிறு எழும் பிறதுக்கு முந்தி எதுவும் நடக்கலாம் எண்டு ஆயிட்டுது. எனக்குச் சரியான பயமா இருக்கு... எங்கடை வீட்டுப் பக்கமும் என்னவோ தெரியாது...'' என்று கூறிக் கொண்டு எழுந்தான் கிரிஸ்ரோபர்.

புகையும் நெருப்பில் நெய்ப்பந்தை விட்டெறிந்தாற்போல, உள்ளும் புறமும் மிகவும் குழம்பிப் போய் இருந்த மேரியையும் இந்தச் செய்தி இன்னும் பாதித்துவிட்டதைக் கிரிஸ்ரோபரும் உணர்ந்திருக்க வேண்டும்.

''சிங்கம், புலி முதலிய விலங்குகள் தான் தங்கடை காதலனுக்காக இன்னெரு விலங்கோடை சண்டை பிடிச்சு இரத்தம் சொட்டச் சொட்ட வாறது... இப்ப மனிசனும் அப்பிடி ஆயிட்டுது...''

கிரிஸ்ரோபர் இதற்குச் சில விநாடிகள் பதில் கூறவில்லை. பிறகு, 'குகநாதனுக்கு வாழ்க்கைப் பொருத்தம் இல்லை. முதல் பொம்பிளையைப் போலவே இரண்டாவது பொம்பிளையும் போயிட்டுது' என்று தனக்குத் தானே கூறுவது போலக் கூறிக் கொண்டு காசை எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

நினைவு கூடத் தொடர முடியாத வேதனையுடன் படுத்துக் கிடந்த மேரி எழுந்து வெளியே வந்தாள். கிருப்ஸின் முடிவு, ராமுக்கு நேர்ந்தகதி மிஸஸ். குகநாதன் இறுதி... எதையும் மனம் ஏற்றுக் கொள்ள மறுத்து அடம்பிடித்தது. ஆனல் அவை யாவும் நடந்து விட்ட யதார்த்தங்கள் ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

வீதியில் வெள்ளைப்பிரம்புடன் 'அன்ரனி' வந்து கொண்டிருந்தான். விரியும் அழகுடன் பொழுது புலர்வதை வாழ்வில் ஒரு போதும் பார்த்திராத அன்ரனி! வழக்கமாக அவன் இந்த நேரத்தில் இதே வழியில் போவதுண்டும் தான். ஆனல் அவனைப்பற்றி மேரி ஒரு போதும் சிந்தித்துப் பார்த்தது கிடையாது.

அன்பு என்ற மொழி அற்புதமானது. ஊமையர் பேச முடியும். செவிடர் கூடக் கேட்டுப் புரிந்துகொள்ள முடியும். **போவி**

கிறிஸ்ரோபர் ஒரு 'சாடிஸ்ற்' என்று புரிந்து கொண்ட பின் வரும் இரவுகள்! அந்த இரவுகளுக்குத் துணை நிற்கும் பயங்கர நிசப்தம். அந்த நிசப்தத்தை இடையிடை கிழிக்கும் துப்பாக்கி வேட்டுக்கள்.

பெயருக்குப் பின்னே பல பட்டங்கள், அண்ணு சவூதியில் உழைப்பது போல் உழைத்துச் சேர்க்கும் பணம், அழகான வீடு... பெரிய கார், வீட்டில் வேலைகளைச் செய்ய வேலையாட்கள். காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு ஆங்கிலம் பேசும் ஒயில்! இவைகளை நினைக்கும் போது பனியில் நனைந்த இனிமையாய் வரும் அற்புதச் சுகம் - இன்று வரவில்லை.

இந்த 'அன்ரனி' போலவே... எல்லாருக்கும் திடீரெனக் கண்கள் குருடாகிப் போனுல்...!

ஆம்! அப்போது ஒருவராலும் மற்றவனுக்குத் தீமை செய்ய முடியாது...... முடிந்தாலும் இலகுவாய்ச் செய்ய முடியாது.

'அன்ரனி, எங்கை போறீங்க?'

அவளது குரலில் கனிவான மிருதுத்தனம் ரஸமாய் இறங்கியிருந்தது. தனது வீட்டுக்கு அயலில் வசித்த இந்த அன்ரனியைத் தான் இதுவரை ஒரு மனிதனுகத்தானும் நினைத்துக் கதைத்திராத அதிசயத்தைத் தனக்குள் எண்ணி வியந்தாள் மேரி.

'சேர்ச்சுக்குப் போறன்... கேட்டது மேரியோ? ஏன் சிஸ்டர் உங்களுக்கு எப்ப கம்பஸ் தொடங்குது'... சிரித்தபடியே கேட்டுக் கொண்டு நடந்தான் அன்ரனி.

'இந்த உலகமும் படிப்பும் பட்டமும்...... அங்கைவாற உறவுகளும்... எல்லாம் போலிதான் அன்ரனி...... எல்லாச் செயற்பாட்டிலையும் சுயநலம். எங்கையும் ஆதிக்க வெறி...

அவளது குரல் உடைந்து துன்பம் வெளிப்பட்டது.

'எல்லாத்தையும் யேசு விட்டை ஒப்படைப்பம்... வாங்கோ சிஸ்டர்...'

இரண்டு வார்த்தையில் ஒற்றைச் செய்கையில் தூய அன்பைக் காட்டி நெஞ்சைத் தொட்டுப் போக எல்லாராலும் முடியாது. அன்ரனியால் அதுமுடிந்தது. அவன்தெளிந்த மனதுடன் மகிழ்வாய் இருந்தான். அவனுல் எப்படி முடிகிறது?

தனக்கும்... கம்பஸில் படிக்கும் மாணவர்கள், விரிவுரையாளர்கள் எல்லாருக்கும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஊரில் உள்ள நாட்டில் உள்ள அனைவருக்கும் திடீரெனக் கண்கள் குருடாகிப் போக வேண்டும் என்றவிசித்திரமான ஆசை ஒன்று மனதைநிறைக்க.

'நானும் சேர்ச்சுக்கு வாறன் அன்ரனி...' என்று கூறி, அவனது கையைப்பற்றி அவனைப் பாசத்துடன் அழைத்துச் சென்ருள் மேரி.

(முற்றும்)


கிறிஸ்தவ

தமிழ் எழுத்தாளர் பேரவை நடத்தும்

**கிறிஸ்தவ**

**சிறுகதை, கவிதைப் போட்டி**

கிறிஸ்தவ எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாகவும் ஆக்கங்களை நூலுருவில் கொண்டுவருவதற்குமான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றன.

விபரங்கட்கு:

DEVADASON JEYASINGH,
'DASONS'
90, KANDY ROAD, KENGALLA.

என்ற விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும்.

## சந்தனத்தைச் சிதறிவிட்டார் இவர்



கடந்த பதினுறு மாதங்களாகச் 'சந்தனச் சிதறல்கள்' கதையைத் தொடர்ந்து எழுதித் 'தொண்டன்' வாசகர்களுக்கு விருந்து படைத்தவர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள். நாட்டில் ஏற்பட்ட பல கஸ்டமான சூழ்நிலைகள் மத்தியிலும், ஒரு மாதங் கூடத் தவருது தமது பொறுப்பைத் திறம்பட நிறைவேற்றியுள்ளார். வாசகர்களிடமிருந்து எமக்கு அவ்வப்போது வந்த கடிதங்கள் கதையின் விறுவிறுப்புக்கும், வெற்றிக்கும் சான்ருக உள்ளன. திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக் கொள்ளுகிறேம்.

சிறுகதை, நாவல்கள் என்று ஏறக்குறைய பதின்மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்குமிவர் ஈழத்தின் முன்னணி எழுத்தாளர்களுள் ஒருவர். பெண் படைப்பாளிகளுள் குறிப்பிடத்தக்கவர். இவரது சிறுகதைகள், நாவல்கள் நூலுருப் பெற்றுள்ளன. காலஞ்சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் இவரைப்பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்துப் பெண் எழுத்தாளர் வரிசையிலே கோகிலா அவர்கள் தமக்கெனத் தனிப் பண்புகளுடன் வேறுபட்டுத் திகழ்வதை அவரது படைப்புகள் எமக்குப் புலப்படுத்தி நிற்கின்றன. குறிப்பாகச் சமூக நிகழ்ச்சிகளையும், அவற்றிடையாக எழும் உணர்ச்சி முனைப்புகளையும் சித்தரிப்பதைவிட அவற்றுக்கு அடிப்படையான உளவியற் காரணிகளை விமர்சிப்பதே கோகிலாவை ஏனையவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் முக்கிய அம்சமாகும்.

## ஒரு தவறு

'அச்சுத்துறையும் எமது (பிர)தேச வெளியீடுகளும் என்ற 'தொண்டன்' செப்டம்பர் இதழ் கட்டுரையில் '1945 காலப்பகுதியில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் திரு. நடேசஐயர் 'வீரன்' என்ற சஞ்சிகை நடாத்தியதை குறிப்பிட வேண்டும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கையின் முதல் தமிழ் தினசரியை வெளியிட்ட கோ. நடேசய்யர் 'வீரன்' என்ற பத்திரிகையை வெளியிட்டார், ஆனுல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அதனை வெளியிடவில்லை. அப்பொழுது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இலங்கை இந்தியன் காங்கிரஸாக இருந்தது. அதனேடு கோ. நடேசய்யர் எந்தவித தொடர்பும் வைத்துக் கொள்ளவில்லை.

தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட 'சுதந்திரன்' நாளிதழில் முதல் ஆசிரியராக கோ. நடேசய்யர் பணியாற்றியுள்ளார். இவரைப் பற்றிய தகவல்களை மேலும் அறிய விரும்பினுல் மலையக எழுத்தாளர் திரு. சாரல் நாடன் எழுதிய 'தேசபக்தன் கோ. நடேசய்யர்' என்ற ஆய்வு நூலில் முழுவிபரங்களும் இடம் பெற்றுள்ளன.

**அந்தனி ஜீவா**

### சாவு என் நண்பன்

காந்திஜி கொலை செய்யப்படுவதற்கு 18 நாட்களுக்கு முன்பு ஜனவரி 12ம் திகதி ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில் நான் 125 வயதுவரை வாழ விரும்புகிறேன் என்று தெரிவித்தார்.

''அதற்கு முன்பு எனக்கு மரணம் வந்து விட்டால் அதை ஏற்றுக் கொள்ள எந்த நிமிடமும் நான் தயாராக இருக்கிறேன். சாவு - என் நண்பன்'' என்றும் அவ்வறிக்கையில்அவர் குறிப்பிட்டிருந்தார்.



சிந்தனைக்கு ஒரு சிறந்த மறைவாக்கு

# நன்றி கூறும் நற்பண்பு

● ரீ. பாக்கியநாயகம்

மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே நன்றி கூறும் நற்பண்பும் இவ்வுலகில் ஆரம்பித்து விட்டதெனலாம். ஆதி மனிதன் ஆதாமின் வரலாறுபற்றி விபரிக்கும் ஆதி ஆகமத்திலிருந்தே, இறைவன் தமக்குச் செய்த எல்லா நன்மைகளையும் நினைத்து, அவருக்குத் தகனபலிகள் மூலமாக, தாலந்துகள் மூலமாக, வயல்களின் விளைச்சல்கள் மூலமாக, முதற் கனிகள் மூலமாக மனிதர்கள் நன்றி செலுத்தி வந்த கதைகளை நாம் பார்க்கலாம்.

தமிழர்களாகிய நம் முன்னோர்களும் நன்றி கூறும் நற்பழக்கத்தை நன்கு அறிந்து வைத்திருந்தனர். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை. செய்நன்றி கொன்ற மகர்க்கு என்றார் திருவள்ளுவப் பெருந்தகை. ஒருவர் செய்த நன்மைக்குப் பதிலாக நாம் நன்றி செலுத்தலை, தென்னை தரும் இளநீருக்கு ஒப்பிட்டுக் காட்டுகிறார் ஔவைப் பிராட்டியார் தமது 'நன்றி ஒருவருர்க்குச் செய்தக்கால் அந்நன்றி என்றுதரும் கொல் என வேண்டா' எனும் வெண்பா மூலம்.

ஆனால் சமீபகாலமாக உலக மக்களது அன்றாட வாழ்க்கையில் நன்றி செலுத்தும் நற்பண்பு அருகிவருவதை அவதானிக்கும் போது, திருமறை வாக்குகளை இறைமக்களே மறக்கும்போது, திருச்சபை இது குறித்து அவதானமாயிருக்க வேண்டியது அவசியமாகின்றது. எமது குடும்பவாழ்க்கையிலே, தனிப்பட்ட வாழ்விலே, சமூக, ஆத்மீக வாழ்விலே இறைவன் நம் ஒவ்வொருவரையும் எவ்வளவாய் ஆசீர்வதித்துக் காப்பாற்றி, வழி நடத்தி வருகிறாரென்பதை உணர்ந்துகொள்ள அனேகம் பேர் தவறிவிடுகிறோம்.

நமக்குள்ள சகலத்தையும் தரவேண்டியது நம்மைப் படைத்த இறைவனின் கடமை எனவும், அவற்றை எல்லாம் பெற்று அனுபவிப்பது நம் ஒவ்வொருவரதும் உரிமை எனவும் சிலவேளைகளில் நாம் தவறாக எண்ணிவிடுகிறோம். இறைவனுக்கெதிரான நமது முறுமுறுப்புகளிலும் முறைப்பாடுகளிலும் முன்நிற்கிறோம்: ஆனால் நன்றி கூறலில் பலமடங்கு பின்னடைகிறோம்.

ஒரு தடவை இயேசுவிடம் பத்துத் தொழுநோயாளிகள் வந்தனர். அவர்களை அவர் சுகமாக்கினார். குணமாக்கிய பின் அக்கால வழக்கப்படி ஆலயக் குருக்களிடம் சென்று தம்மைக் காண்பிக்குமாறு அவர்களை அவர் கேட்டுக் கொண்டார். காண்பித்த பின்னர் இயேசுவுக்கு நன்றி தெரிவிக்க அவர்களில் ஒரேயொருவன் மாத்திரமே திரும்பி வந்தான். சுகமடைந்த பத்துப்பேரில் நன்றி செலுத்தும் நற்பண்பு அந்த ஒருவனுக்கே மாத்திரம் இருந்தது கண்டு இயேசு விசனமடைந்ததாக லூக்காஸ் சுவிசேஷம் தெரிவிக்கிறது.

'விளக்கை எரிய விடுங்கள். எனது ஆவி பிரியும் போது வெளிச்சம் இருக்கட்டும்.' இப்படித்தான் தன் உயிர் பிரியும் தறுவாயில் பேசினார், இருளை ஓட்ட மின்விளக்கைக் கண்ட தோமஸ் அல்வா எடிசன்.

லண்டன் நகரின் தேம்ஸ் நதிக்கரையில் சிறுவனொருவன் விளையாடிக் கொண்டிருந்தான். சடுதியாக நீருக்குள் விழுந்து விட்ட அவனை. கடமையிலிருந்த கடற்படை மாலுமி ஒருவர் நீருக்குள் பாய்ந்து காப்பாற்றினர். சிறுவனை அவனது வீட்டிற்கு அழைத்துச் சென்று தாயாரிடம் ஒப்புவித்தார் அந்த நல்ல மனிதர்.

நாட்கள் பல நகர்ந்தன. ஒருநாள் மாலை வீதிவழியே நடந்துசென்ற அம்மாலுமி தனக்கெதிரே தான் காப்பாற்றிய சிறுவனும் அவனது தாயாரும் நடந்து வருவதைக் கண்டார். தன்னைக்கண்ட சிறுவன் தாயாரிடம் தன்னைச் சுட்டிக்காட்டி ஏதோ சொல்வதையும் அவர் அவதானித்தார். தன்னை அடையாளம் கண்டு கொண்ட அந்தத் தாயார் தன் மகனைக் காப்பாற்றியதற்காகத் தமக்கு நிச்சயம் நன்றி கூறப்போகிறரென எண்ணி சிரித்த முகத்துடன் தம்மைத்தயார் செய்தவண்ணம் நடந்தார் மாலுமி.

சிறுவனையும் தாயாரையும் சந்தித்ததும் மரியாதைக்காக மாலுமி தலை குனிந்தார். 'நீர்தானே என் பையனை நதிக்குள்ளிலிருந்து எடுத்தது?' எனக் கேட்டார் தாயார்.

'ஆம் அம்மா; குளிர்ந்த நீருக்குள் தத்தளித்துக் கொண்டிருந்த அவனைக் கரைக்குக் கொண்டு வருவதே பெரும்பாடாகவிருந்தது' எனக்கூறி தமது வீரப்பிரதாபங்களை பெருமிதத்துடன் எடுத்துச் சொன்னர் மாலுமி, தாயாரின் நன்றிச் சொற்களை எதிர்பார்த்த வண்ணம்.

தாயார் சொன்னர்: 'அதெல்லாமிருக்கட்டும் மாலுமி: பையனின் தலையிலிருந்த தொப்பி எங்கே?' மாலுமி முகத்தில் ஈயாடவில்லை!

102ம் சங்கீதத்தில் 'நெஞ்சே நீ ஆண்டவரை வாழ்த்துவாயாக; அவர் செய்த நன்மைகளை எல்லாம் மறவாதே' எனத் தாவீதரசன் பாடுவதைப் பார்க்கும் போது, கடவுளின் கரத்திலிருந்து நாளாந்தம் நாம் பெற்றுவரும் நன்மைகளுக்காக நன்றி செலுத்துவது எத்துணை அவசியமென்பது நன்கு புலனுகின்றது. பயங்கரங்களும், பதட்டமும் சூழ்ந்த நாட்களிலெல்லாம் இறைவனது எண்ணிறகடங்கா ஈவுகளையும் கிருபையையும் ஒவ்வொன்ருக எண்ணி எண்ணி அவற்றிக்காய் அல்லும் பகலும் ஆண்டவரைத் துதிப்பது ஒவ்வொரு விசுவாசியினதும் தலையாய கடமை என்பதைத் திருமறை வாக்கியங்கள் நமக்கெல்லாம் நன்கு தெளிவு படுத்துகின்றன.

> 'எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள்; இடைவிடாது செபியுங்கள். என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து இயேசுவில் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே.'
>
> (1 தெசலோனிக்கேயர் 5 : 18)

## உலகிலேயே...

- ஹாங்காங்கில் உள்ள ஹவுஸ் ஒப் கோர்ட் என்ற வீடுதான் உலகிலேயே அதிக விலைமதிப்புடைய இல்லம். அந்த வீட்டின் எல்லாப் பாகங்களும், வேலி உட்பட 18 கரட் தங்கத்தினுல் உருவாக்கப் பட்டது.
- உலகிலேயே அதிகமான அளவு அணுகுண்டு சோதனை நடாத்திய நாடு அமெரிக்கா. இது800 முறைகளுக்கு மேலும், ரஷ்யா 575க்கு மேலும் சோதனைகள் நடாத்தியுள்ளன.
- உலகிலேயே தனி மனிதனின் வருமானம் மிகுதியாக உடைய நாடு துபாய்.
- உலகிலேயே மொனக்கோ என்ற சிறு நாட்டில் உள்ள உணவு விடுதிதான் விலை மிகுதியாக உள்ள உணவு விடுதி. அங்கு இருவர் ஒருவேளை உணவு உட்கொண்டால் 5000 டொலர் கொடுக்க வேண்டும்.

சென்ற இதழ் தொடர்ச்சி...

# கிறிஸ்தவ ஒழுக்க நெறிக் கோட்பாடுகள்

**D. வின்செனற் பற்றிக்**
O. M. I.; B. Th, B. A.

## ஒழுக்கநெறி அமைப்பின் வகைகள்

மனிதனை மனிதனாக, மாண்புடன், மனிதபிமானத்துடன் வாழ வைக்கும் நோக்கத்துடன் சிந்தனையாளர்களால் வரையறை செய்யப்பட்ட ஒழுக்கநெறி அமைப்புக்கள் 4 வகைகளாகக் காணப்படுகின்றன. அவை யாவன.

### அ) உலக இன்பப் பயன்பாடே ஒழுக்கநெறியின் வரையறை

தனி மனிதனுக்குக் கூடுதலான இன்பத்தைத் தரக்கூடிய செயற்பாடே சரியானது என்று தனியாள் பயன் நெறி முறைக் கோட்பாடு (Individual Utilitarianism) கூறுகின்றது. மிகவும் கூடுதலான ஆட்களுக்கு சந்தோஷப் பயன்பாட்டைத் கொடுக்கக் கூடிய செயற்பாடே சரியானது என்று சமூக பயன் நெறி முறைக் கோட்பாடு (Social Utilitarianism) கூறுகின்றது. மேலே கூறப்பட்ட இரு கோட்பாடுகளும் கிறிஸ்தவ அறநெறிக்கு முரணானவை. ஏனெனில், இவை உகல இன்பத்தை, வாழ்வின் பயன்பாட்டு முடிவினை மையமாகக் கொண்டே ஒழுக்க நெறியினை வரையறை செய்துள்ளன.

### ஆ) சுயநிறைவு காணுதலும் உலகார்ந்த வளர்ச்சியும்

''உண்டு குடித்து மகிழுங்கள் ஏனெனில், நாளை என்பது நிச்சயமான ஒன்றல்ல'' என்ற ரீதியில் தன்னிறைவு காண அழைப்பிதழ் விடுக்கும் இக்கோட்பாடும் கிறிஸ்தவத்திலிருந்து வேறுபட்டது. தன்னலப் போக்கில், உளவியல் சார்பாக மனிதனைத் தன்னிறைவுக்கு நெறிப்படுத்தும் இம்முறை மனிதனை மையமாகக் கொண்டு உள்ளது. இதனை விடுத்து இறையருளின் தேவையை மனிதன் உணர வேண்டும். ''சமூகத் தேவைகளை இன்றைய மனிதனின் தலையாய கடமைகளாக மதித்து, அவற்றின்படி ஒழுகுதலை ஒவ்வொருவரும் புனிதமான ஒரு கடனாகக் கொள்ள வேண்டும். தனிமனிதரும் அவர் தம் குழுக்களும் ஒழுக்க, சமூக நற்பண்புகளைத் தங்களுக்குள் வளர்த்து, சமுதாயத்தில் பரவச் செய்தாக வேண்டும். இதனால் தேவையான இறையருளின் உதவியால் புதுமனுக்குலத்தை உருவாக்கும் உண்மையான புது மனிதரும் சிற்பிகளும் தோன்றுவர்'' (இன் உல. திரு. 30)

### இ) ஒழுக்கநெறியின் அகநிலை வரையறை

பயன்பாடு, மகிழ்ச்சி, தன்னிறைவுபோன்ற மதிப்பீடுகளைப் பொருட்படுத்தாது சரியான காரணம் சார்பாக மனிதன் செயல்படவேண்டும் என்று இக்கோட்பாடு கூறுகின்றது. இதன்படி. காரணமே எது சரி, எது பிழை என்று நிர்ணயிக்கின்றது. புறநிலையான ஒழுக்க நெறிக் கோட்பாடுகளின்றித் தனது சொந்தத் தீர்மானத்தின்படி செயற்பட ஆரம்பித்தால் சமுதாயத்தில் மனிதர்களிடையே குழப்பமே மிஞ்சும் இறுதி இலட்சியம், இறையருள் இவற்றினோடு தொடர்பில்லாத இவ் அமைப்பு மனிதனது நெறிப்பாங்கான தேடுதலுக்குத் திருத்தமான, பொருத்தமான விடையைக் கொடுக்கத் தவறி விடுகின்றது.

ச) இறுதிமுடிவும், இறைவனின் சித்தமும்

''படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக மனுவைப் படைத்தான் தனை வணங்க''

படைப்பின் சிகரமாகப் படைக்கப்பட்ட மனிதன், மகத்துவமும் மாண்பும் மிக்க மனிதன் தனது வாழ்க்கையை இறைமையமாகக் கொண்டே அமைத்துக் கொள்ள வேண்டியவனுயிருக்கின்றான். கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன் கடவுளை மகிமைப்படுத்தி கடவுளின் மாட்சிக்காக வாழவேண்டியவனுயுள்ளான். ''நீர் அவனைத் தேவதூதரிலும் சற்றே தாழ்த்தி, மகிமையிலும், கனத்திலும் அவனுக்கு முடி சூட்டினீர். உமது கரங்களின் செய்கைகளின்மேல் அவனுக்கு அதிகாரம் கொடுத்தருளினீர்... எல்லாவற்றையும் அவனுடைய கால்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்''(சங்.8 : 4 - 8)

இறைவனின் இருத்தலையும் அவருடைய அன்பையும் வெளிப்படுத்துகின்ற செயற்பாடே படைத்தல் ஆகும். இந்தப் படைப்பின் உன்னத சிருஸ்டியான மனிதன் இறையன்பிலே பங்கெடுக்க வேண்டியவனுகின்றான். இந்த அன்பு தான் இறைவனைப் பார்த்து, 'அப்பா, தந்தாய்' (உரோ. 8 : 16) எனக் கூவி அழைக்கச் செய்கின்றது. எனவே, இறைவனோடு கொள்கின்ற அன்பின் ஒன்றிப்பே எமது இறுதி இலட்சியமாகின்றது. பூரணமான மகிழ்ச்சி பூரணமான நன்மைத் தனத்தினை நித்தியத்திற்கும் கைப்பற்றிக் கொள்வதில் இறையன்பில் சங்கமமாவதில் தங்கியுள்ளது. 'அகரமும் னகரமும் நானே - தொடக்கமும் நானே' (திருவெளிப்பாடு 21 : 6)

வாழ்நாள் பூராகவும் கிறிஸ்துவின் மூலமாக இறைவனைப் பின் பற்றுதலே கிறிஸ்தவ அறநெறியின் சிறப்பம்சமாகும். இறையரசை உலகில் நிலைநாட்டுவதும் இறைவனை மகிமைப்படுத்துவதுமே கிறிஸ்துவின் சிறப்பான சாதனையாகவிருந்தது. இறைவனை மகிமைப்படுத்துவதே கிறிஸ்துவின் இலட்சியம் என்பதை நற்செய்தி ஏடு விளக்குகின்றது.

'நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராக விளங்குவதே என் தந்தைக்கு மகிமை' (அரு 15 : 8)

'நீர் எனக்குச் செய்யக் கொடுத்த பணியைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மகிமைப்படுத்தினேன்' (அரு 17 : 4)

'உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக; உலகிலே அவர் தயவு பெற்றவருக்கு அமைதி ஆகுக' (லூக் 2 : 14)

இதனையே புனித சின்னப்பர் கொரிந்தியக் கிறிஸ்தவர்களுக்குக் கூறினர்.

'நீங்கள் உண்டாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாம் கடவுளின் மகிமைக்கெனச் செய்யுங்கள்' (1 கொரி. 10 : 31)

இன்னும், புனித சின்னப்பர் உரோமைக் கிறிஸ்தவர்களுக்குக் கூறினர்.

'யாவும் அவரிடமிருந்தே வந்தன, உண்டாயின. அவருக்காகவே இருக்கின்றன அவருக்கே மகிமை என்றென்றும் உண்டாகுக! ஆமென்.' (உரோ. 11 : 36)

அனைத்தும் கிறிஸ்துமயமாக (christianization) வேண்டும் என்ற இறைவனின் திட்டத்தை புனித சின்னப்பர் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு கூறுகின்றார்.

'தம் திருவுளத்தின் மறைவான திட்டத்தை நமக்கு அறிவித்தார். காலநிறைவில் நிறைவேற்ற வேண்டிய ஏற்பாடாக முதலிருந்தே கிறிஸ்துவுக்குள் அத்தியவான திட்டத்தை வகுத்து வைத்தார். விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ள அனைத்தையுமே கிறிஸ்துவுக்குள் ஒன்று சேர்க்க வேண்டும் என்பதே அத்திட்டம்' (எபே. 1 : 9, 10)

-தொடரும்-

உன்னுடைய என்னுடைய என்பது இல்லாவிட்டால் உலகம் சுவர்க்கமாக இருக்கும். ஜெர்மனி



## இளைஞர் அரங்கம்

# அதிகாரம்

- அதிகாரம்
- அதிகாரப் பரவலாக்கல் பற்றி இன்று அதிகம் பேசப் படுகின்றது.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் பற்றியும், குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கான அதிகாரப்பரவலாக்கல் இன்னும் வழங்கப்படவில்லை எனக்குரல் கொடுக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அரச அலுவலகங்களில், கச்சேரிகளில், கல்விக்காரியாலயங்களில் பணிபுரியும் அதிகாரிகள் பலர் தமது சாதாரண அதிகாரங்களையே பயன்படுத்தத் தயங்குகின்றனர், சிலர் அவர்களுக்கு கீழ் பணிபுரிவோரில் ஒரு சிலரின் நலன்களை மாத்திரம் பேண முற்படுகின்றனர்.

வடமேல் மாகாணத்தில் ஒரு சாதாரண கல்வி அதிகாரி தீர்மானிக்கும் ஓர் ஆசிரியரின் விடுமுறை தொடர்பான விடயத்தை. (எமது) கிழக்கு மாகாணத்தில் இருக்கும் ஒரு கோட்டக்கல்வி அதிகாரி தீர்மானம் எடுக்க முடியாமல் தவிக்கிறார், தட்டிக் கழிக்கிறார் என்றால் இது தாழ்வு மனப்பான்மையா ஒரு பக்கச் சார்பா எனப்பலரை சிந்திக்கத் தூண்டியுள்ளது. அதேவேளை மத்திய அரசு வழங்கும் அதிகாரங்களை இவர்கள் எப்படி நடைமுறைப்படுத்துவார் என்பதும் கேள்விக் குறியாகும். இதுவே இன்று அனைத்து வடக்கு - கிழக்கு அரச ஊழியர்களின் வினாவாகும்.

அதிகாரங்களில் இருப்போர் தமது சாதாரண அதிகாரங்களையே பயன்படுத்த அஞ்சுவார்களாயின் அவர்களை உடனடியாக அவ்விடங்களில் இருந்து அகற்றிவிட வேண்டும்.

அதிகார வெறி கூடாதுதான். அதற்காக, தமக்கு இருக்கும் அதிகாரங்களை இல்லை என்று தட்டிக் கழித்து,

'இதற்கு, மேலுள்ளவர்களைத்தான் கேட்க வேண்டும்'

'எங்களுக்கு அப்படி ஒன்றும் செய்ய முடியாதுள்ளது'
என்று பசப்பும் அரச அதிகாரிகள் தாங்களாகவே ஒதுங்கிக் கொள்ள வேண்டும்.

வினைத்திறனும், பொறுப்புணர்வும் உள்ளவர்களுக்கு இடம் கொடுத்தல் வேண்டும்.

ஆயுதங்களுக்கு அஞ்சி அல்ல,

நீதியான வார்த்தைகளுக்குச் செவிசாய்த்து தமது அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும் என அன்புக்குரல் கொடுப்பது

—கலையுலகன்

தொடர் - 4

# அச்சுத்துறையும் எமது (பிர)தேச வெளியீடுகளும்

எஸ். லோகநாதன்

## நாவல் - சிறுகதை இலக்கியங்கள்

இலங்கையில் நாவல்கள் - சிறுகதை இலக்கியங்களைப் பொறுத்தவரையில் தமிழ் மொழியில் மிகக்குறைந்த வெளியீடுகளே உள்ளன என்று மீண்டும் மீண்டும் கூறலாம். சிங்கள மொழியில் வெளிவரும் நாவல்கள் போல் எம் தமிழ் மொழியில் நாவல்கள் வெளியிடப்படுவதில்லை.

வீரகேசரி வெளியீடுகளாக சிறிது காலம் நாவல்கள் பல வெளியிடப்பட்டன. அவற்றிலும் சில வெளியீடுகளே தரமானதாகவும் கொள்ளப்பட்டுள்ளன. உயரிய மதிப்பீடுகள் இன்மையாலும், எங்கோ - எப்பொழுதோ கூறப்பட்ட கருத்துக்களை மீண்டும் - மீண்டும் கூறுவதாலும் அவையும் நிலைத்து நிற்க முடியாது போய் விட்டன.

இலங்கையில் துப்பறியும் நாவல்களே இல்லை. ஏனெனில் துப்பறிவதற்குரியதாக ஏதும் நடைபெறுவதில்லை. இப்பொழுது அத்தகைய நிகழ்வுகள் இடம் பெறுவதாயினும் எல்லாம் வெளிப்படையாகவே நடைபெறுகின்றன.

சிங்கள மொழியிலான நாவல்களுக்கு, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் தமது சேவைகளை விரிவுபடுத்தி அதிகமான தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரிப்பதனால் முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது என்று கூறலாம். இதனால் இன்று சிங்கள நாவலாசிரியர்கள் அதிகமானோர் ஈடுபாடு கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இந்திய நாவல்கள் போல், இலங்கையில் நாவல்கள் பொதுவாக அமைவதில்லை என்பது உண்மைதான். அதனால் தென்னிந்தியத் தமிழ் நாவல்கள் எல்லாம் முதற்தரம் என நாம் இங்கு குறிப்பிடவில்லை. ஆனால் நவமான முறையில் படைக்கப்படுகின்றன. உரை நடைகள் நன்றாக அமைகின்றன. இவை இளம் வயதினரிடையே பெரும் வரவேற்பையும் பெற்றும் விடுகின்றன.

இந்திய நாவல்களும், நாவலாசிரியர்களும் வளர்ச்சி பெற்றமைக்குரிய அடிப்படைக் காரணி இந்தியச் சினிமாத்துறை என்பது நாம் ஏற்றுக்கொள்ளும் உண்மையாகும்.

சிறுகதை இலக்கியங்களும், சிறுகதைகளைக்கொண்ட சஞ்சிகைகளும் இலங்கையில் தமிழ் மொழியில் மிகக் குறைந்த அளவிலேயே வெளிவருகின்றன. 1930க்களைப் பொறுத்தவரையில், தமிழ் மொழியில் பல சிறுகதை இலக்கியங்கள் வெளியிடப்பட்டமையை நாம் மறுக்க முடியாது. சில இளம் எழுத்தாளர்கள் எம் நாட்டில் சிறுகதைகளைப்படைப்போர்களாக இன்று வளர்ச்சியடைந்துள்ளார்கள். இந்த வரிசையில் டொமினிக் ஜீவா, நாவண்ணன், சண்முகம் சிவலிங்கம், ரவிப்ரியா, உமாவரதராஜன் ஆகியோர்களை இங்கு குறப்பிட விரும்புகிறேன். இவர்கள் மட்டுமல்ல இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பலர் இன்று எழுத்துலகில் பிரவேசித்துள்ளனர் என்பதை நாம் காலத்திற்குக்காலம் நிகழும் வெளியீட்டு விழாக்கள் மூலம் உணரலாம்.

காண்டா மிருகங்களில் வெள்ளை நிறக் காண்டா மிருகங்களும் உண்டு. இப்போது அவை அநேகமாய் அழிந்து விட்டன. அவை $3\frac{1}{2}$ டன் எடை உள்ளவை. கொம்பின் நீளமே 5 அடி.

(தொடரும்)

# விவிலியப் புதிர் - 5

நற் செய்திகளை நாம் படிக்கும் போது, அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த பலவித மான நாணயங்களின் பெயர்கள் வருவதைக் காண்கிறோம். இப்புதிரில் நீங்கள் செய்ய வேண்டியது இதுதான். கீழே தரப்பட்டுள்ள நாணயங்கள் எந்த நற்செய்தியில், எத்தனை யாம் அதிகாரத்தில், எத்தனையாம் வசனத்தில் வருகின்றது என்று நிரப்பி அனுப்புங்கள். ஒரு வினாவுக்கு பல விடைகள் இருந்தால் ஒரு விடையைக் குறிப்பிட்டால் போதுமானது.

1. 2 செப்புக் காசுகள்.................................................
2. 500 வெள்ளிக்காசு.................................................
3. ஸ்தாத்தேர்.................................................
4. 300 வெள்ளிக்காசு.................................................
5. 5 தாலந்து.................................................
6. 200 வெள்ளிக்காசு.................................................
7. 10 பொற்காசுகள்.................................................
8. 30 வெள்ளிக்காசு.................................................
9. 10,000 தாலந்து.................................................
10. 10 வெள்ளிக்காசு.................................................

பெயர்:.................................................

முகவரி;.................................................

.................................................

பரிசு: 50/-, 25/-

முடிவுத் திகதி: 30 - 11 - 1989

பூரண மகிழ்ச்சி என்பது ஒரு காரியத்தில் முழு முயற்சியுடன் ஈடுபடும் போது தான் ஏற்படுகிறது.

ரஸ்ஸல்

## விவிலிய ப்புதிர் - 13
## முடிவுகள்

1. எலியாஸ்
2. ஆதாம்
3. ஈசாக்
4. ஓசே
5. ரெபேக்காள்
6. மோயிசன்
7. ஆபிரகாம்
8. பார்வோன்
9. தாவீது
10. சாரூள்

### பரிசு பெறுவோர்

**1ம் பரிசு**

**J. அகிலன் சொய்சா**
1ம் வட்டாரம்
வங்காலை, மன்னார்.

**2ம் பரிசு**

**செல்வி. அ. ஸ்ரெலா பாரதி**
B.L/ 47 5வது அவனியு,
அம்பாறை.

### பாராட்டுப் பெறுவோர்

1. **சுதா யேசுதாசன்**
312, மஞ்சணம், பழைய கல்முனை வீதி,
நாவற்குடா, மட்டக்களப்பு.
2. **ஜே. அருளப்பு (ஆசிரியர்)**
தாழங்குடா - 3, காத்தான்குடி.
3. **ம. ஜெயவதனி**
1044, செல்வநாயகபுரம்
திருகோணமலை.
4. **அழகுதுரை யேசுதாசன்**
லீச்சுக்கல்முனை, மட்டக்களப்பு.
5. **இன்னுசி செபராணி**
புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயம்,
வாந்தாறுமூலை.

பங்கு பற்றியோர் : 61
சரியான விடை அளித்தோர் : 44

அனைவருக்கும் எமது நன்றி.

## என்னுடைய ஆசைகள்

என்னுடைய ஆசைகள் பல. அவற்றில் சில நிறைவேறலாம். சில நிறைவேறுமல் போகலாம். ஆசைகள் இல்லாத மக்களே இல்லை. ஆனுல் எனது ஆசைகளை இழக்க எனக்கு விருப்பமில்லை. என்னுடைய ஆசைகளில் சிலவற்றை இப்போது கூறுகிறேன் கேளுங்கள்.

எனக்கு வகுப்பில் முதலாம் பிள்ளையாக இருக்க என்றுமே ஆசைதான். அதற்காக முயற்சி செய்து வெற்றியும் பெற்றிருக்கிறேன். மருத்துவப் படிப்பு படிக்க வேண்டும். சிறந்த வைத்தியராக வந்து நோயாளிகளைக் குண மாக்க வேண்டும். இவையெல்லாம் எனது ஆசைகளிற் சில.

எனது அப்பா தன் பிள்ளைகளான எங்களுக்காக எக்கஷ்டத்தையும் தாங்குவார். எங்கள் அம்மா எங்களின் நல்வாழ்விற்காக எத்தியாகத்தையும் புரிவார். நான் நன்றுகப் படிக்க வேண்டும். பிற்காலத்தில் எங்கள் பெற்றோரையும், சகோதரிகளையும் நல்ல நிலையில் வைக்க வேண்டும். இவைகளே எனது ஆசைகள். இவைகள் நிறைவேறுவதற்காக ஒவ்வொரு நாளும் கடவுளை பிரார்த்தனை செய்கிறேன்.

**கடந்த 17 - 9 - 89 அன்று கல்முனையில் வாகன விபத்தொன்றில் அகால மரணமடைந்த பத்து வயது நிரம்பிய செல்வி ரம்யா ஜோசப் தாம் எழுதிய கட்டுரைக் குறிப்பொன்றில் வெளியிட்ட ஆசைகள் இவை.**

இவர் கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியின் ஐந்தாம் ஆண்டு மாணவி.

இளவயது ஆசைகள் நிராசையாகிப் போனது எத்துணை துர்ப்பாக்கியமானது.

# உங்கள் பக்கம்

புரட்டாதி இதழைக் கண்டேன். எமது குரல், சமய உணர்வினை வளர்க்கக் கூறியுள்ளமை வரவேற்கத் தகுந்தது. 'ஏக்கங்கள்' சிறுகதை சில பெற்ருேர்களுக்குப் படிப்பினையாகவும், எடுத்துக்காட்டாகவும் இருந்தது. 'நீங்கள் உலகின் ஒளி' என்ற கட்டுரை மனதுக்குச் சாந்தியைத் தந்தது.

**சில்வெஸ்டர் ஜெயமாறன்** திருகோணமலை.

நம்மைச் சுற்றி நடக்கும் அவலங்களை... வாசகர்களுக்கு அறியத்தந்த யோகி அவர்கள், அரசியல் காரணங்களால் அகால மரணமான அருள் தந்தையர் வரிசையில் அருள் தந்தை சந்திரா அவர்களின் பெயர் பொறிக்காத காரணம் என்னவோ!

**டெல்ஷியா** மட்டுநகர்.

(அருள் தந்தை சந்திரா இறக்கு முன் எழுதப்பட்ட கட்டுரை காலங்கடந்தே தொண்டனில் பிரசுரமானது. காரணம் புரிந்திருக்கும் என்று நம்புகிருேம் (ஆ-ர்)

புரட்டாதி இதழ் கவர்ச்சியாய் அமைந்திருக்கும். சந்தனச் சிதறல் விறுவிறுப்பாகத் தொடர்கிறது. சிந்தனைக் கட்டுரை சிந்திக்க வைத்தது.

**B- பிலோமினு** ஆத்திமோட்டை.

தற்போது தொண்டன் அட்டையில் இடம்பெறும் 'ஆரம்பம் பெப்ரவரி 1969 என்ற வாசகத்தின் பொருள் என்னவோ?

**நா. அன்ரன்** பாலையூற்று,

(அட! புரியவில்லையா? தொண்டன் இருபது ஆண்டுகள் நிறைந்த வாலிபன் என்பது தான் (ஆ-ர்)

ஒக்டோபர் தொண்டனில் இடம்பெற்ற 'தூது செல்லு தென்றலே' என்ற கவிதை என் மனதைத் தொட்டது.

**ஹரல்ட் சந்திரா** கூளாவடி.

க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள விதத்தில் அப்போஸ்தலர் பணியை தெளிவாக வெளியிட்டு வருகிறீர்கள். பாராட்ட வேண்டிய விடயம். இதனுல் எத்தனை மாணவர்கள் பயன் பெறுகிருர்கள் என்பது சந்தேகமே! ஏனெனில் யாருமே இதைப்பற்றி எழுதுவதாகக் காணவில்லையே!

**ஜெசற் ரெலாறன்ஸ்** கூளாவடி.

முன் அட்டையிலே இன்ன மாதத்து இதழ் எனக்குறிப்பிடும் போது (உதாரணமாகப் புரட்டாதி என்ற தமிழ்ச் சொல்லை விட்டு செப்ரம்பர் என்ற) ஆங்கிலச் சொல்லை ஏன் பிரசுரிக்கின்றீர்கள்? தமிழ் மனம் கமழச் செய்யுங்களேன்.

**ஊற்றுத்தேவன்** பாலையூற்று,
திருகோணமலை.

(ஊற்றுத்தேவரே! நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஆங்கில மாதங்களையே வழக்கத்தில் கொண்டிருக்கிருேம். ஆங்கில மாதப் பெயர்களை தமிழில் அழைப்பது சரியென்று நாம் கருதவில்லை. திகதிகளில், கால அளவுகளில் மாறுபாடு உண்டு. அவைகளை விரித்துரைக்க இது இடமல்ல. (ஆ-ர்)

விவிலியப் பின்னணியோடு எழுதப்பட்ட 'என் வீட்டைத் திறந்து விட்டேன்' என்ற சிறுகதை வரவேற்கத்தக்கது. யோகி அவர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

**A. B செல்வராஜன்** கல்முனை.

சந்தனச் சிதறல்கள் தொடர்கதை விறுவிறுப்பை ஏற்படுத்துகிறது. அடுத்த மாதத் தொண்டனை ஆவலாய் எதிர்பார்க்கிறேன்.

**T. அலோசியஸ்** மட்டக்களப்பு.

ஒக்டோபர் மாதத் தொண்டனில் இடம் பெற்ற 'நீயே அருள வேண்டும்' என்ற கவிதை மிகவும் நன்ருக இருந்தது.

**யோ. அமலன்** பாத்திமாபுரம்.

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்து வரும்

நாள்: 4, 5, 6 - 11 - 89

நேரம்: காலை 5.50 மணி

கத்தோலிக்க நற்சிந்தனை

வழங்குபவர்; திரு. எஸ். எஸ். யேசுதாஸ்

★

நாள்: 7 - 11 - 89

நேரம்: மாலை 6.45 மணி

சிறுவர் உலகம்

○ சாவுக்குப் பின் - உரையாடல்

எழுதியர்; திருமதி அகுஸ்தீன்

நாள்: 12 - 11 - 89

நேரம்: மாலை 7 00 மணி

புதிய உலகம்

○ கடைசி காலத்துக் கடமைகள் - கதைச் சித்திரம்

○ விவிலியப் போட்டி

நாள்: 18, 19, 20 - 11 - 89
நேரம்: 5.50 மணி
வழங்குபவர்: திரு. ஜே. பற்றிக்

★

காலம்: 21 - 11 - 89
நேரம்: மாலை 6.45 மணி
சிறுவர் உலகம்

○ முதல் குற்றம் - விவிலிய நாடகம்
எழுதியவர்: கலைமணி

★

காலம்: 26 - 11 - 89
நேரம்; மாலை 7 00 மணி
புதிய உலகம்

○ அர்ப்பணமாகும் வாழ்வு நாடகம்
எழுதியவர்; எஸ். ஜெயராஜா

நிகழ்ச்சித் தொகுப்பு;
மலர்வேந்தன்

நேயர்களே! நிகழ்ச்சிகளைக் கேட்டு, உங்கள் கருத்துக்களை எழுத மறவாதீர்கள்.

தொடர்பு;

இணைப்பாளர்
கத்தோலிக்க வானொலி
நிகழ்ச்சிகள் (தமிழ்)
அ. பெ. எண் 44
மட்டக்களப்பு.

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு
தொண்டன் ஆசிரியர் குழுவினரால் 27 - 10 - 89ல் வெளியிடப்பட்டது.